★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் செற் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு ஏற்ப பட்டுப் புடைவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கு
RASI
ராசி சில்க்ஸ்

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 13 வெள்ளிக்கிழமை (25 - 02 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 90

# தலைவர் பிரபாவின் பணிப்பின் பேரிலே
# சிங்கள யுத்தக் கைதிகள் இருவர் விடுதலை

## மேற்றிராணியாரின் தூதர் கூட்டிச்சென்றார்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 25

விடுதலைப் புலிகளின் காவலில் இருந்த சிங்களப் பொலீஸார் இருவரை தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் மனிதாபிமான அடிப்படையில் நேற்று விடுதலை செய்தார். விடுதலையான இருவரும் நேற்றைய தினமே கொழும்பு புறப்பட்டுச் சென்றனர்.

சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்து சென்ற கத்தோலிக்க அதிமேற்றிராணியார் நீக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை தமிழீழத் தேசியத் தலைவருக்கு தனிப்பட்ட முறையில் கடிதம் ஒன்றை அனுப்பி விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்த இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கு மேலாக புலிகளின் காவலில் இருந்த திலகரத்தின பண்டார (வயது 39 - தெல்தெனியா), சந்திரசேகர (வயது 36 - தம்புல்ல) ஆகிய இருவருமே நேற்று விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

அகில இலங்கை கத்தோலிக்க துறவிகள் சபைத் தலைவர் வண. பிதா. அலெக்ஸாண்டர் விடுவிக்கப்பட்ட இரு சிங்களப் பொலீஸாரை யும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சிங்களப் பொலீஸார் இருவரையும் உத்தியோக பூர்வமாக கையளிக்கும் நிகழ்ச்சி நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகள் சார்பில் அரசியல் பிரிவைச் சேர்ந்த திரு. தங்கனும், வண. பிதா. அலெக்ஸாண்டரும் விடுவிப்புப் பத்திரத்தில் ஒப்பமிட்டனர்.

[5 ஆம் பக்கம் பார்க்க]

### சாவகச்சேரியில் புக்காரா!

தென்மராட்சி, பெப். 25

சாவகச்சேரிப் பகுதியில் நேற்றுப் பகல் 12 மணியளவிலும் பின்னர் பல தடவைகளும் புக்காரா விமானம் ஒன்று வட்டமிட்டுச் சென்றது.

இதனால் நகரில் மக்கள் பதற்றமடைந்தனர்.

(ஓ-117-51)

### முச்சந்தி முரளி



தேர்தலில வெல்லுறதற்கு அதி உத்தமர் இன்னும் என்னென்ன தில்லுமுல்லுச் செய்வாரோ?.........

## கல்முனைக் கடற் பகுதியில் கடற்படையினர் தாக்கு

யாழ்ப்பாணம், பெப் 25

பூநாரி—கல்முனைக் கடற்பகுதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் திடீரென பிரவேசித்த கடற்படையினர் பீரங்கித் தாக்குதலையும் துப்பாக்கிப் பிரயோகங்களையும் நடத்தினர்.

சுமார் இருபது நிமிடங்கள் வரையில் கடற்படையினர் கல்முனை, பூவரசம்தீவு, மண்ணித்தலை, மேற்கு அரியாலைப் பகுதிகளை நோக்கி தாக்குதலை தொடர்ந்தனர்.

மீனவர்கள் அநேகர் காலை 7 மணிக்கு முன்னரே கரை சேர்ந்து விட்டதால், உயிர்ச் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை. (ஓ-17-51)

### ஹெலி நோட்டம்

அளவெட்டி, பெப். 25

ஏழாலை, மல்லாகம், அளவெட்டி, தெல்லிப்பளைப் பகுதிகளில் நேற்றுக் காலை ஹெலிக்கொப்டர் ஒன்று வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது பொம்மர் ஒன்றும் இப்பகுதியில் நேற்றுப் பறந்தது. இதன் காரணமாக இப்பகுதியில் சிறிது பதற்றநிலை காணப்பட்டது.

(இ-143-13)

## ஹெந்தல கப்பல் நங்கூரம் கடலினுள் அறுந்து விழுந்தது

### சுழியோடிகள் தேடுகின்றனர்

யாழ்ப்பாணம், பெப் 25

பருத்தித்துறைக்கு மா ஏற்றி வந்த 'ஹெந்தல' கப்பலில் இருந்து அறுந்து விழுந்த நங்கூரத்தை தேடும் முயற்சியில் சுழியோடிகள் ஈடுபட்டுள்ளனர்.

காங்கேசன்துறையில் இருந்து பருத்தித்துறைக்கு வரும் வழியில் பருத்தித்துறை இறங்குதுறைக்கு அண்மையில் இக் கப்பலின் நங்கூரம் அறுந்து வீழ்ந்தது.

கப்பலில் இருந்த மற்றைய நங்கூரம் பின்னர் பயன்படுத்தப்பட்டது.

கடலில் விழுந்த நங்கூரத்தைத் தேடும் பணியில் ஆனைக்கோட்டை சாவற்காட்டைச் சேர்ந்த 12 சுழியோடிகள் ஈடுபட்டுள்ளனர் என்றும் —

நேற்று மாலை வரை நங்கூரம் அகப்படாத நிலையில் ஹெந்தல கப்பல் திருகோணமலைக்குப் புறப்பட்டதாகவும் —தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பல் திருமலையில் மாவை ஏற்றிக்கொண்டு மீண்டும் பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கிறது. (இ-173-3)

## சமாதான முயற்சிகளை ஊக்குவிக்கவே தலைவர் இரு பொலீஸாரை விடுவித்தார்

### கையளிப்பு வைபவத்தில் பாலசிங்கம்

கத்தோலிக்க திருச்சபை மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதற்காகவும் —

நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் வகையிலும் —

சிங்களப் பொலிஸார் இருவரை விடுதலை செய்ய தமிழீழ தேசியத் தலைவர் முடிவு செய்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் விடுவிக்கப்பட்ட சிங்களப் பொலீஸாரை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் வைபவத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது கலாநிதி பாலசிங்கம் இத்தகவலை தெரிவித்தார்.

அண்மையில் யாழ். வந்து திரும்பிய கத்தோலிக்க அதிமேற்றிராணியார் அதி வண நீக்கலஸ்மார்க்கஸ் பெர்னாண்டோ தனிப்பட்ட முறையில் தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு அனுப்பிய கடிதத்தில் விடுத்திருந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

### பருத்தித்துறைக்கு கோமாரி

யாழ்ப்பாணம், பெப். 25

கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'கோமாரி' கப்பல் காங்கேசன்துறையில் படையினருக்கான பொருள்களை இறக்கிவிட்டு இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது

(இ-173-3)

## அரசுக்கு நன்றி தெரிவிக்க நாம் தயாராக இல்லை

### விடுதலையான பொலீஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 25

எமது விடுதலை குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம். அதற்காக விடுதலைப் புலிகள் தலைவருக்கும் ஏனைய அங்கத்தவர்களுக்கும் மற்றும் கத்தோலிக்கத் திருச்சபை குருமாருக்கும் நன்றி செலுத்துகிறோம். ஆனால் அரசுக்கு நன்றி சொல்ல நாம் எவ்விதத்திலும் தயாராக இல்லை.

நேற்று விடுதலை செய்யப்பட்ட சிங்களப் பொலீஸார் இரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மீன்பிடித் தடை நீக்கம்:

## அரச அதிபர் மேலதிக விவரம் கேட்டு கொழும்புக்கு செய்தி

யாழ்ப்பாணம், பெப். 25

எதிர்வரும் முதலாம் திகதி முதல் மீன் பிடிப்பதற்கான தடையை நீக்கும் அரசின் அறிவிப்பு குறித்து விபரமான நடைமுறைத் திட்டத்தை அனுப்புமாறு அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அவசர செய்தி ஒன்றை நேற்று கொழும்புக்கு அனுப்பியுள்ளார்.

யாழ் மாவட்ட மீனவர்கள் மீன் பிடிப்பதற்காக விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபருக்கு நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து தகவல் அனுப்பப்பட்டிருந்தது

தடைநீக்கப்பட்டதன் நடைமுறை விவரங்களை தாம் அரசிடம் கேட்டுள்ளதாகவும்—

அந்த விவரங்கள் கிடைத்ததும் மக்களுக்கு தெரியப்படுத்தப்படும் என்றும் — அரச அதிபர் தெரிவித்தார்.

(இ-3-17)

## வானில் பறந்துகொண்டிருந்த விமானத்திற்கு தீமூட்ட முனைந்த இலங்கையர் கைது

கொழும்பு, பெப். 25

கல்ப் எயார் விமானம் மூலம் மத்திய கிழக்கில் இருந்து நாடு திரும்பிக்கொண்டிருந்த இலங்கையர் ஒருவர் தான பயணம் செய்த விமானத்திற்கு தீமூட்ட முற்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை இச்சம்பவம் நிகழ்ந்தது.

மஹரகமையைச் சேர்ந்த நீல் ஜயசுந்தர என்ற சிங்களவரே அந்த இளைஞர் ஆவார்.

விமானத்தின் மலசலகூடத்திற்குள் சென்று அங்கிருந்த ''டொயிலட்'' பேப்பருக்கு அவர் தீவைத்தார் எனச் சொல்லப்படுகிறது.

அபாய சமிக்ஞை ஒலி எழுப்பப்பட்டதை அடுத்து விமானச் சிப்பந்திகள் மலசலகூடக் கதவை உதைத்து உடைத்துத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் அட்டைகள் வவுனியாவில் அபகரிப்பு!

கொழும்பு, பெப். 25

வவுனியா நகரசபைத் தேர்தலுக்கு விநியோகிக்கப்படவேண்டிய சுமார் 3 ஆயிரத்து 600 வாக்காளர் அட்டைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு விநியோகிப்பதற்கு முன்னர் இனந்தெரியாதோரால் அபகரித்துச் செல்லப்பட்டிருப்பதாக முறையிடப்பட்டுள்ளது

வவுனியா உதவி தேர்தல் ஆணையாளர் வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

வவுனியா நகரசபைத் தேர்தலில் வாக்களிக்கும் தகைமையை 12 ஆயிரத்து 604 பேர் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் வாக்காளருக்கு விநியோகம் செய்வதற்காக 8 ஆயிரத்து 820 வாக்காளர் அட்டைகளை கடந்த 16 ஆம் திகதி வவுனியா தபால் அலுவலகத்திடம் ஒப்படைத்திருந்தது என்று தெரிவிக்கப்பட்டது

(ஒ-எ-6)

### கிழக்கில் காணாமற் போயிருந்த

## 3 பெண் வேட்பாளர்கள் கொழும்பில கண்டுபிடிப்பு

கொழும்பு, பெப் 25

கிழக்கு மாகாணத்தில் ஐ.தே.க சார்பில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் மூன்று பெண் வேட்பாளர்கள் கடந்த 16 ஆம் திகதி முதல் காணாமற் போய்விட்டார்கள் என்று அவர்களின் உறவினர் பொலீஸில் புகார் செய்திருந்தனர்.

இந்த மூன்று வேட்பாளர்களையும் விசேட பொலீஸ் குழுவினர் கொழும்பில் வெள்ளவத்தை ... கண்டுபிடித்தனர்.

இ மூவரையும் கடத்தியவர் என்று சந்தேகிக்கப்படும் றெட்பானா அமைப்பின் கிழக்கு மாகாண அமைப்பாளர் எனக் கருதப்படும் பாலச்சந்திரன் என்பவரையும் பொலீஸார் கைது செய்தனர்.

சம்பந்தப்பட்ட வேட்பாளர்களும் மைத்துனர் பாலச்சந்திரன் என்பவரும் நேற்று முன்தினம் மட்டக்களப்புக்கு பொலீஸாரால் கொண்டு செல்லப்பட்டனர்.

போரதீவுப்பற்று வடக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்துவதில்லை என முடிவு

யாழ்ப்பாணம், பெப். 25

வடக்கே கப்பல் மூலம் அனுப்பப்படும் பொருள்களுக்கான கப்பல் கட்டணத்தை அரச அதிபரே பொறுப்பேற்க வேண்டும் என்ற அரசின் அறிவிப்பை கண்டித்து எதிர்வரும் முதலாம் திகதி யாழ். மாவட்டத்தில் நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டப் பேரணியும் மறியல் போராட்டமும் கைவிடப்பட்டுள்ளன.

யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நேற்று நடந்த வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கப்பல் கட்டணத்தை அரச அதிபரே ஏற்க வேண்டும் என்ற முடிவை தற்காலிகமாக அரசு நிறுத்தியுள்ளதை அடுத்தே போராட்டத்தை நிறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

அதேவேளை — கப்பல் கட்

( 2ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்தின் அமர்வு ஒத்திவைப்பு நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு அஞ்சி!

கொழும்பு, பெப் 25

நாடாளுமன்றத்தின் அமர்வுகள் அடுத்த மாதம் 22ஆம் திகதி வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளன

இது தொடர்பாக சபை முதல்வர் விஜயபால மெண்டிஸ் நேற்று நாடாளுமன்றத்தில் கொண்டுவந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டது

நிலையியற் கட்டளையின்படி நாடாளுமன்றம் அடுத்த மாதம் முற்பகுதியில் கூடவேண்டும்.

எனினும் — சபை அமர்வை ஒத்திவைப்பதற்கான பிரேரணைக்கு ஆதரவாக 96 எம்பிக்கள் வாக்களித்தனர் எதிராக 21 எம்பிக்கள் வாக்களித்தனர் வாக்களிப்பின் போது சபையில் சமுகமளிக்காதவர்களில் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் ஒருவர் ஆவார்.

அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகள் முன்னறிவித்தல் கொடுத்துள்ள இவ்வேளையில் —

நாடாளுமன்ற அமர்வுகளை ஒத்திவைத்திருப்பது அதற்கு அஞ்சியே என்று அவதானிகள் சுட்டிக் காட்டினர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அரசாங்கத்தின் குறைபாடுகள், முறைகேடுகள் சுட்டிக் காட்டப்பட்டால் —

மார்ச் முதலாம் திகதி நடக்கும் கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல், மார்ச் 24 ஆம் திகதி நடக்கும் தென்மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றில் அரசுக்குப் பாதகமான விளைவை ஏற்படுத்தும் என்ற அச்சத்திலேயே அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது

அரசியல் கட்சிகளின் தலைவர்களின் மாநாடு இம்மாத ஆரம்பத்தில் நடந்தபோது நாடாளுமன்ற அமர்வுகளை ஒத்திவைப்பது என்ற யோசனை நிராகரிக்கப்பட்டிருந்தது எனி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அஷ்ரப் கூட்டத்தில் கல்லெறி 25 பேர் காயமடைந்தனர்

### ஏறாவூர்ப் பகுதியில் சம்பவம்

கொழும்பு, பெப். 25

மட்டக்களப்பு ஏறாவூர் புன்னக்குடா பகுதியில் இடம்பெற்ற முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக இரு பெண்கள் உட்பட 25 பேர் காயமடைந்தனர்.

கடந்த திங்கட்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் பேச ஆரம்பித்த சிறிது நேரத்தில் கற்கள் வீசப்பட்டன.

பொலீஸார் குண்டாந்தடி பிரயோகத்தை நடத்தினர்.

சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த செயித் அலி ஸாஹிர் மௌலானாவை அஷ்ரப் விமர்சிக்க முற்படுகையிலேயே அசம்பாவிதம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## 41 பேருக்கு செயலகத்தில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம் பெப் 25

அரசாங்க சேவை எழுதுநர், தட்டெழுத்தாளர் (தமிழ்/ஆங்கில) சேவைகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக 1993ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பொதுப்போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களில் 41 பேருக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ். செயலகத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறவிருக்கிறது

இந் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் பற்றிய விபரங்களை செயலகத்தில் அறியலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மறைவட்ட

கத்தோலிக்க ஆசிரியர் சங்க பொதுக்கூட்டமும், செயற்குழுத்தெரிவும்

இடம்:- மறைக்கல்வி நிலையம்
காலம்:- 27 2.1994, ஞாயிறு, மு ப 9.30 மணி

அனைத்து கத்தோலிக்க ஆசிரியர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

அருட்திரு R.A சகாயநாயகம்
மறைக்கல்வி இயக்குநர்
(29632)



கரமாட்சியர்பாள் தேவஸ்தானம்
நீர்வேலி

**மாசிமக உற்சவம்.**

இன்று 25 2-94 வெள்ளிக்கிழமை
காலை 10 00 மணி: சங்காபிஷேகம்
பி. ப. 1.00 மணி: நவசக்தி அர்ச்சனை.
(விசேட குங்கும அர்ச்சனை).
மாலை 4.30 மணி: தீபபூசை
6 00 மணி: அம்பாள் வீதிவலம் வந்து அருள்பாலிப்பார்

இந் நிகழ்ச்சிகளில்:- நீர்வேலி ஸ்ரீ சங்கர வேதாகம கலாசாலை அதிபர், மாணவர்கள் கலந்துகொள்வார்கள்:
இரவு- 7 00 நற்சிந்தனை
செல்வன் தெ. ஞானக்குமரன்
இரவு- 7.15 மணி அகில இலங்கை அமுதசுரபி கலாமன்றம் வழங்கும்

பட்டிமன்றம்

சமூக வாழ்வை நெறிப்படுத்துவது சமயமா? சட்டமா?

| சமயம் தான்:- | சட்டம் தான் - |
|---|---|
| ச. விஜயசுந்தரம் | தி. வேல்நம்பி |
| பு ஸ்ரீஸ்கந்தராசா | செல்வன் தி. செல்வமனோகரன் |
| இ. யோகநாதன் | இ. நித்தியானந்தன் |

நடுவர் சொல்வேந்தர் சி. சிவனேசன்
இரவு 9 மணி:- மேற்படி கலாமன்ற மாணவர்கள் வழங்கும்

காத்தவராயன் (சிந்து நடைக் கூத்து)
நெறியாள்கை. த. விக்கினேஸ்வரன்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(29629) — ஆலய நிர்வாகிகள்



கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முதல்வராய் ஒப்பற்ற பணிசெய்த ஒறேற்றர்

உயர்திரு சி. சுப்பிரமணியம்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனைப்படுகின்றோம்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள் ஊழியர்கள்
யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.
(சி/2068)



கல்விமாமலை சரிந்ததோ?



எமக்குக் கல்வியூட்டி வழிகாட்டிய பேரறிஞர் "ஒறேற்றர்" ஐயாவே நாம் தலை குனிந்து நின் பாதம் வணங்கி எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்

துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்
(புகழ்பெற்ற புத்தக வியாபாரிகள்)
பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம்
(சி/7274)


அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில்

# எந்த நேரமும் பேச்சு ஆரம்பிக்கும்

# ஒரு சூழ்நிலை உருவாகி வருகிறது!

கொழும்பு, பெப். 25
அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எந்த நேரத்திலும் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகக் கூடிய சூழ்நிலை உருவாகி வருகின்றது

## அமைச்சர் சொல்கிறார்

அம்பாறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசும்போது, புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரத்னா இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் இனப்பிரச்சினையை குறுகிய காலத்தில் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகைய சூழ்நிலை வெற்றியளிக்கும் பட்சத்தில் இன்று யுத்தத்திற்காகச் செலவிடப்படும் பணம் நாட்டின் அபிவிருத்திக்குச் செலவு செய்யப்படும். அதன் பின்னர் இலங்கை பொன் கொழிக்கும் நாடாகமாறும் என்றும் அவர் கூறினார். (ஓ-த)

## கிறிஸ்தவ குருமார் யாழ். வருவர்

யாழ்ப்பாணம், பெப். 25
யாழ். மறை வட்டத்தின் பேய்ப்புப்பணி மாநாட்டில் கலந்து கொள்ள நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து கிறிஸ்தவ மத குருமார்கள் அடுத்த மாதம் 8 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

அடுத்த மாதம் 8 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் இம்மாநாடு நடைபெறவிருக்கிறது.

இம்மாநாட்டில் மன்னார் ஆயர் அதி. வண. இராயப்பு யோசெப் மற்றும் திருகோணமலை, தென். இலங்கை மறை வட்டங்களின் குருமார்கள் பார்வையாளர்களாகக் கலந்து கொள்வர். (உ-3)

## நாடகம்

யாழ் - பிரதான வீதி, திருமறைக் கலாமன்ற அரங்கில் நாளை சனிக்கிழமை மாலை 6-45 மணிக்கு கலை நிலா அரங்கு நடைபெறும்

"இசையும் நடத்தும் மாதாந் தப்பாடல்" "யார் நீ" தவக்கால நாடகம் ஆகியன கலை நிலா அரங்கில் இடம் பெறுகின்றன. (க 51)

★ ★ ★

யாழ். கல்வித் திணைக்கள வடக்கு வலய அலுவலகத்தில் நடத்தப்படும் சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று நாளை சனிக்கிழமை காலை 8-30 மணிதொடக்கம் 12 மணி வரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம்பெறும்.

வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் "பாடசாலைச் சுகாதாரம்" என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி பி இரத்தினசபாபதியும், "மாணவர்களுக்கு ஏற்படக் கூடிய நெருக்கீடு எதிர்த்தாக்கங்களும் அவற்றைக் கையாளும் முறைகளும்" என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி டி. ஜே சோமசுந்தரமும், "மாணவர்களுக்கு ஏற்படும் உளவியல் பிரச்சினைகளை கையாளும் வழி முறைகள்" என்ற தலைப்பில் அருட்திரு எஸ் டேமியனும் உரையாற்றுவார்கள். (க-17)

★ ★ ★

யாழ்ப்பாணம் நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த இசை ஆசிரியர்கள் நாளை சனிக்கிழமை மதியம் 12 மணி அளவில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் சேவைக்கால பயிற்சிக் கொடுப்பனவு சம்பந்தமாக அங்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (ஒ)

## ஸ்கந்தபுரத்தில் கால்நடை முதலுதவி சிகிச்சை நிலையம்

கிளிநொச்சி, பெப். 25
கிளிநொச்சி அக்கராயன் வட்டத்தில் ஸ்கந்தபுரம் பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் கால்நடை முதலுதவிச் சிகிச்சை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

15 ஆயிரத்துக்கும் அதிகமான கால்நடைகள் உள்ள இப்பிரதேசத்தில் கால்நடைகளுக்குரிய பராமரிப்பின்றியும், ஆலோசனை வசதிகளின்றியும் கால்நடை வளர்ப்பாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இச்சிரமங்கள் தற்போது நீக்கப்பட்டுள்ளன

இந் நிலையத்தில் வாரத்தின் ஒவ்வொரு புதன்கிழமையும் கால்நடைப் போதனாசிரியரும், மாதத்தில் 1ஆம், 2ஆம் திகதிகளில் மாவட்ட மிருகவைத்தியரும், ஆலோசனைகளும் சிகிச்சைகளும் வழங்கி வருகின்றனர்.

இதுவரை 1000 இற்கு மேற்பட்ட கோழிகளுக்கும், 250க்கு மேற்பட்ட கால்நடைகளுக்கும் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. அத்துடன் இத்திட்டத்தினூடாக இறைச்சிப் பரிசோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ)

## சூரியகந்த எலும்புக்கூடுகள் மாணவர்களுடையது அல்ல

### நீதிமன்றில் பொலிஸார் அறிக்கை

கொழும்பு, பெப். 25
சூரியகந்த புதைகுழியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள், 1988 - 89 காலப்பகுதியில் எம்பிலிப்பிட்டியாவில் இருந்து காணமற் போனதாகக் கூறப்படும் பாடசாலை மாணவர்களுடையவை அல்ல

எம்பிலிப்பிட்டி நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்த அறிக்கையில் இரகசியப் பொலிஸார் முன்கண்டவாறு தெரிவித்தனர்.

சூரியகந்த புதைகுழியில் மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டது தொடர்பாக 1988- 89 காலப்பகுதியில் சூரியகந்த பகுதியில் உள்ள ரூபவாஹினி கோபுரத்தை காவல் புரிந்து வந்த பாதுகாப்புப்படையினர் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் இரகசியப் பொலிஸாரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் மற்றும் பொருள்கள் பற்றிய அறிக்கை ஒன்றை சட்டவைத்திய அதிகாரியிடமிருந்து தாம் எதிர்பார்ப்பதாகவும் இரகசியப்பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-எ)

## காமினிக்காக பதவியை விட்டுக் கொடுப்பாராம்!

### ஹட்சன் சமரசிங்க சொல்கிறார்

காமினி திசாநாயக்க விரும்பினால் நாடாளுமன்ற ஆசனத்தை அவருக்கு விட்டுக் கொடுக்கத்தயார் என்று கொழும்பு மாவட்ட ஐ தே க எம்பி ஹட்சன் சமரசிங்க தெரிவித்தார்.

"முன்னாள் அமைச்சரான காமினி திசாநாயக்க புகழ்பெற்ற அரசியல்வாதி. முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனாவின் ஆதரவு அவருக்கு உண்டு எனவே தான் எனது ஆசனத்தை விட்டுக் கொடுக்க முன்வந்துள்ளேன்' என்று அவர் கூறினார்.

கொழும்பு கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஹட்சன் சமரசிங்க எம். பி. தேசியப் பட்டியல் மூலம் தெரிவானவர் அல்ல மறைந்த ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் அத்துலத் முதலியின் இடத்துக்கு கொழும்பு மாவட்ட எம். பியாகத்தெரிவானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த ச)

## ஹொங்கொங் விவகாரம்;

## பிரிட்டனுடன் சீனா பேச்சுக்கள் நடத்தாது!

ஹொங்கொங்கில் ஜனநாயக சீர்திருத்தம் கொண்டுவருவது பற்றிய பேச்சுவார்த்தைகளை பிரிட்டனுடன் தொடர்ந்து நடத்தப்போவதில்லை என்றும்—

அதற்கான கதவுகள் பூரணமாக மூடப்பட்டுவிட்டன என்றும் சீனா அறிவித்துள்ளது

ஹொங்கொங் தற்போது பிரிட்டனின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

1997இல் இது சீனாவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. இதனிடையில் ஹொங்கொங்கில் ஜனநாயக சீர்திருத்தங்களை அறிமுகம் செய்வதில் பிரிட்டன் தீவிரமாக செயல்பட்டு வருகிறது [த-எ]

உலகிலேயே முதல் முதலாக

## கடலில் மின் நிலையம் தமிழகத்தில் அமைக்கப்படும்

சென்னை பெப் 25
உலகிலேயே கடலில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் முதல் மின் உற்பத்தி நிலையம் ஒன்று தமிழகத்தில் அமைக்கப்பட இருக்கிறது

தமிழ்நாட்டின் குலசேகரப் பட்டினத்திற்கு அருகில் உள்ள கடலில் இந்த நிலையத்தை அமைக்க அமெரிக்க கம்பனி ஒன்றுக்கும், தமிழக அரசுக்கும் இடையில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கப்பல் ஒன்றில் நிர்மாணிக்கப்படும் மின் நிலையம் குலசேகரப் பட்டினத்துக்கு அருகில் உள்ள கடலில் அமைக்கப்படும்

இந்த மின் நிலையம் 100 மெகவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என்றும் —

எந்தச் சூறாவளிக் காற்றுக்கும் பாதிக்காத வகையில் இந்த மின் நிலையம் இயங்கும் எனவும் — தெரிவிக்கப்பட்டது.

25 கோடி அமெரிக்க டொலர் செலவில் இந்த நிலையம் அமைக்கப்படவுள்ளது. (ஓ-3)


விக்னா
கல்வி நிறுவனம்
அரசியல்
திரு சிலன்
சனி, ஞாயிறு வகுப்பு
94 மீட்டல் 7 - 8
95 பிரிவு 8 - 9
ஆரம்பமாகிவிட்டது
(சி-7215)



எடிசன்
அக்கடமி
[யாழ். இந்து அருகில்]
411/1, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH
BY
BRITTO
ஆரம்பம்
25-02-94 இன்று
பிற்பகல் 3.30
[வியா; வெள்ளி 4 மணி]


## ஜெயலலிதா பிறந்த தினம்

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் 46 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி அவருக்கு பிரதமர் நரசிம்மராவ், மாநில ஆளுநர் சென்னாரெட்டி, தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி உட்படபல அரசியல் தலைவர்கள் நேற்று வாழ்த்துத் தெரிவித்தனர். (இ-எ)

## வானியலும் சோதிடக் கலையும்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் வானியலும் சோதிடக் கலையும் பற்றிய ஓர் அடிப்படைக்கற்கை நெறி தொகுதி ஒன்றின் ஆரம்ப விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது

சனி, ஞாயிறு தினங்களில் தொடர்ந்து ஏழு வாரங்கள் இடம்பெறவுள்ள இக்கற்கை நெறி மொத்தம் 63 மணித்தியாலங்களை உள்ளடக்கியதாகும்.

புறநிலைப்படிப்புகள் அலக இணைப்பாளர் திரு இரா. சிவசந்திரன் தலைமையின் கீழ் இடம்பெறவுள்ள மேற்படி கற்கை நெறியின் ஆரம்பவிழாவில் ஆரம்ப உரையை கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்துவார்.

பேராசிரியர் வி. சிவசாமி, கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர், திரு. எம். வேதநாதன், திரு பொ. செல்லத்துரை ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளார். (இ)

## கண்ணாடி விநியோகம்

யாழ் மாவட்டத்தில் உள்ள விழிப்புலன், செவிப்புலன் குறைந்த வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களுக்கும் மற்றும் இடம் பெயர்ந்தவர்களுக்கும் மூக்குக் கண்ணாடிகளையும் காது கேட்கும் கருவிகளையும் வழங்க யாழ் செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்திலுள்ள விழிப்புலன், செவிப்புலன் குறைந்தவர்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு யாழ் செயலகம், யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களைக் கேட்டுள்ளது. (த-17)

## பாடசாலைகளில்

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு. வே. சண்முகராஜா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக நல்லூர் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.சி. புலேந்திரனும், சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு இளம்பரிதியும் கலந்துகொள்வர். (ஒ)

★ ★ ★

மாதகல் நுணசை வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறும் (த-90)

★ ★ ★

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 1 30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (த-90)

## நாளை பிரசாரம் முடிவு

கிழக்கிலும் வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரங்கள் எதிர்வரும் சனிக்கிழமை நள்ளிரவுடன் முடிவடைய வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டிசில்வா அறிவித்திருக்கிறார். (உ-எ)

## பிறப்புச்சான்று விண்ணப்பம் ஏற்கப்படுகிறது

யாழ்ப்பாணம், பெப், 25
1954 ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்தவர்களின் பிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் நேற்று முன்தினம் முதல் ஏற்கப்படுகின்றன.

இச்சான்றிதழ் வழங்குவதற்கான படிவங்கள் இல்லாததால் விண்ணப்பம் ஏற்பது இடை நிறுத்தப்பட்டிருந்தது

'ருகுணு' கப்பல் மூலம் சான்றிதழ் வழங்கும் புத்தகங்கள் வந்து சேர்ந்ததையடுத்து விண்ணப்பங்கள் ஏற்கும் வேலைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின. (உ-3)

ஆர்ப்பாட்டப்...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
டணத்தை நிரந்தரமாக அரசே பொறுப்பேற்க வேண்டும் என்று அரச அதிபரைக் கோருவது என்றும் —

குறிக்கப்பட்ட கால அவகாசத்தில் அரசு அதை செய்யாத பட்சத்தில் ஆர்ப்பாட்டப் பேரணியையும் மறியல் போராட்டத்தையும் நடத்துவதென்றும் — நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (இ-3)


வெற்றிடம்

அச்சுக்கோப்பாளர் (பயிலுநர்)

மேற்படி வேலை பழக விரும்பும் ஆண்கள் 01-03-94. 02-03-94 திகதிகளில் காலை 10 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரில் வரவும்

நிர்வாக முகாமையாளர்

அருண் பிறிண்டேர்ஸ் அன்ட் பப்ளிஷேர்ஸ்

இல. 15, 2 ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
(சி/7417)



மார்ச் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள

மக்கள் வங்கி - எழுதுவினைஞர்

போட்டிப்பரீட்சைக்கான

விசேட துரித பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 28-02-94 மு.ப. 9மணி

பாடநெறி:- பொதுவிவேகம், மொழித்திறன்

★ திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில்
★ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள்
★ அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 250/- (முழுப்பயிற்சிக்கும்)

போட்டிப்பரீட்சையில் வெற்றிபெற அரியவாய்ப்பு

அஸ்ரன் கல்வி நிலையம்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(மக்கள் வங்கிக்கு அருகில்)
(சி/7418)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொம்பனித் தெருவில் வீதி மூடப்பட்டு

# உயர் பொலீஸ் அதிகாரிகள் வாழும் பகுதிக்கு பாதுகாப்பு!

### புலிகள் தாக்கலாம் என்ற பீதியில்

கொழும்பு, பெப். 25

உயர் பொலீஸ் அதிகாரிகளை கொலை செய்ய தமிழீழ விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருப்பதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து கொழும்பு கொம்பனித் தெருவில் உள்ள உயர் பொலீஸ் அதிகாரிகள் வசிக்கும் பகுதிகளுக்கு பூரண பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கொம்பனித் தெரு இயூ வீதிப் பகுதியில் உயர் பொலீஸ் அதிகாரிகளின் குடியிருப்புக்கள் உள்ளன. அவற்றில் பத்துக்கும் மேற்பட்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர்கள் வசித்து வருகின்றனர். அத்துடன் பொலீஸ் சுப்பிரின்டன்கள், உதவிப் பொலீஸ் சுப்பிரின்டன்கள் பலர் அங்கு வசித்து வருகின்றனர்.

இராணுவ புலனாய்வுப் பிரிவின் தகவலை அடுத்து கொம்பனித்தெரு 'இயூ' வீதி முற்றாக மூடப்பட்டுள்ளது. அப் பகுதியில் வசிப்பவர்கள் மட்டுமே அந்த வழியால் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றமும் அப் பாதையிலேயே அமைந்துள்ளதால் நீதிமன்றம் செல்வோர் மாற்றுப் பாதையால் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக பொலீஸ் தலைமையக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-5)


# இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் 14ஆவது இசை விழா

கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

## பதினான்காம் நாள் - இன்று

ஈ. எஸ். பேரம்பலம் வர்த்தக நிறுவனத்தின் ஆதரவில்

மாலை

**4-00 — 5-00** மங்கள இசை

| ★ நாதஸ்வரம் | ★ தவில் |
| --- | --- |
| எம். சிவசுப்ரமணியம் | என். ராமு |
| எஸ். செல்வகுமார் | என். ரவீந்திரன் |
| வீ. செல்வராஜா | ஆர். ரஞ்சன் |
| வீ. வரதராஜா | வீ. சபேசன் |
| | ஆர். முருகதாஸ் |

**5-00 — 5-20** பாட்டு

எஸ். பாலமுருகன்
வீ. ஸ்ரீவேகா
எஸ். ஹம்சானந்தி
எஸ். சாருமதி
வீ. யோராணி — பாட்டு

எஸ். சுகிர்தா — வயலின்
எம். சஜன் — மிருதங்கம்

**5-20 — 5-40** வீணை இசை

நாகச்சந்திரா அரவிந்தன்
தயானி நாகச்சந்திரா — வீணை

பி. ரதிருபன் — மிருதங்கம்

**5-40 — 6-15** பாட்டு

கே. சுகிர்தா — பாட்டு
எஸ். சிவகலா — வயலின்
பி. ரதிருபன் — மிருதங்கம்

**6-15 — 7-00** பாட்டு

பரமேஸ்வரி கணேசன் — பாட்டு
சாந்தநாயகி சுப்ரமணியம் — வயலின்
கே. கண்ணதாஸன் — மிருதங்கம்

**7-00 — 7-30** மங்கள விளக்கேற்றல்

திரு. பே. நாகரெத்தினம் ஈ. எஸ். பி.
திரு. கே. கே. ஏ. கந்தையாபிள்ளை
திரு. பூ. சசிதரன்
திரு. ந. சத்தியரூபன் (சிறிநதியா)

அருள் உரை:
பிரம்மஸ்ரீ சுந்தரேஸ்வர குருக்கள்
(பிரதமகுரு துர்க்கை அம்மன் தேஸ்தானம், தெல்லிப்பளை)

தலைவர்:
திரு. சி. வி. கே. சிவஞானம்

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி
செ. சம்பந்தநாதன்,
(முகாமையாளர், இ. வங்கி, 2ஆம் கிளை)

சிறப்பு விருந்தினர்:
திருமதி பி. எஸ். ஸ்கந்தராஜா
(அதிபர், வேம்படி மகளிர் கல்லூரி)

**7-30 — 8-30** கெஞ்சிற் கச்சேரி

பி. நாகேந்திரம் — நாதஸ்வரம்
ஆர். ராதாகிருஷ்ணன் — வயலின்
கே. கண்ணதாஸன் — மிருதங்கம்
பி. கணேசன் — தவில்
சதா வேல்மாறன் — கடம்

**8-30 — 9-30** பரதநாட்டியம்

விக்னேஸ்வரி சரவணமுத்து

கலா ரஸிகர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்!

வாழ்த்துவோர்:

"இராஜன் இசையகம்"
இசைக் கருவி திருத்தகம்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[இ-7881]


# அரச, எதிரணி எம். பிக்கள் மார்ச் 9க்கு பின் கட்சி மாறுவர்

கொழும்பு, பெப். 25

அடுத்த மாதம் 9ஆம் திகதிக்குப் பின்னர் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி ஆகியவற்றில் இருந்து தற்போதைய எம். பிக்கள் சிலர் பரஸ்பரம் கட்சிமாறலில் ஈடுபடலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றது.

ஐந்து ஆண்டுகள் எம். பி. யாக இருக்கும் ஒருவரே எம். பிமாருக்கான ஓய்வூதியம் பெறமுடியும் என நாடாளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம்—தற்போது பதவியில் இருக்கும் எம். பி. மார்களில் பலர், ஓய்வூதியம் பெறுவதற்கான பதவிக் கால எல்லையை அடுத்த மாதம் 9ஆம் திகதியுடன் பூர்த்தி செய்ய இருக்கின்றனர்.

இத்தினத்திற்குப் பின்னர், கட்சி மாறி அதன் காரணமாக எம். பி. பதவியை இழந்தாலும், அவர்கள் தொடர்ந்து எம். பிமாருக்கான ஓய்வூதியத்தைப் பெற முடியும்.

9ஆம் திகதிக்கு முன்னர் அவர்கள் பதவியிழந்தால்—உரிய சேவையை பூர்த்தி செய்யாத காரணத்தினால்—ஓய்வூதியம் பெறும் தகுதியையும் இழந்துவிடுவர்.

இதனைக் கருத்திற் கொண்டு—

கட்சி மாற திட்டமிட்டிருக்கும் எம். பிக்களில் பலர், தமது திட்டத்தைச் செயற்படுத்துவதை அடுத்த மாதம் 9ஆம் திகதிக்குப் பின்னர் வரும் ஒரு தினத்துக்கு ஒத்தி வைத்துள்ளனராம்.

ஐ. தே. கவில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு நெருக்கமான எம். பிக்கள் சிலர் —

பிரேமதாஸாவின் குடும்பத்தவருக்கு ஐ. தே. கவில் இடமளிக்காது இருப்பதுடன், அரசுசார்புப்பத்திரிகைகளைக் கொண்டே திருமதி ஹேமா பிரேமதாஸா மீது தாக்குதல் நடத்துவதிலும் தற்போதைய அரசு ஈடுபட்டுள்ளதாக கவலை தெரிவித்திருக்கின்றனர்.

ஜனாதிபதி மாளிகையில் இருந்து இரத்தினக்கல் காணாமற்போனது. சேவா வனிதா அமைப்புக்கு சொந்தமான வாகனங்கள் காணாமற் போனமை ஆகியன பற்றிய செய்திகளை அரசு சார்பு பத்திரிகைகளே வெளியிட்டன.

இதனால் அதிருப்தியுற்ற எம். பிக்களில் சிலர் அடுத்த மாதம் 9ஆம் திகதிக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ராஜினாமாச் செய்யத் திட்டமிட்டுள்ளனர் என்று நம்பத் தகுந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

பிரேமதாஸாவுக்கு விசுவாசமான எம். பிக்களுக்கு அடுத்த தேர்தலில் போட்டியிட ஐ. தே. க. வேட்பாளர் நியமனம் வழங்கப்படமாட்டாது என்றும்—

அவர்கள் கட்சியின் தேசியப்பட்டியலிலும் இடம்பெறமாட்டார்கள் என்றும் அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றது. (உ-எ-6)

# 4 ஆண்டுகள் பதவியிலிருந்த எம். பிமாருக்கு ஓய்வூதியம்

கொழும்பு, பெப். 25

நான்கு ஆண்டுகளுக்குக் கூடுதலாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த முன்னைய உறுப்பினர்கள் அனைவரும் ஓய்வூதியம் பெறுவதற்கு வசதியாக நாடாளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்களன்று இத்தகவலை அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

இச்சட்டத்திருத்தம் தொடர்பான பிரேரணை இன்னும் ஒரு மாதத்தினுள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்,

ஸ்ரீ. ல. சு. கவிலிருந்து கட்சி மாறி ஐ. தே. கவில் சேர்ந்த அனுரா பண்டாரநாயக்காவுக்கு இடமளிப்பதற்காக—

ஐ. தே. கவின் தேசியப் பட்டியல் மூலம் எம். பியான டபிள்யூ ஐ. பெர்னாண்டோ தமது பதவியை இராஜினாமாச் செய்ததும்—

அந்த இடத்துக்கு அனுரா எம். பியாக நியமிக்கப்பட்டதும் தெரிந்ததே,

டபிள்யூ. ஐ. பெர்னாண்டோ எம். பி. பதவியில் ஐந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்ய முன்னரே பதவியிலிருந்து விலகிவிட்டதால் அவர் எம். பி. மார் ஓய்வூதியத்தைப் பெறும் தகுதியை இழந்துவிட்டார்.

நாடாளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தில் உத்தேச திருத்தம் கொண்டு வரப்பட்டால் பெர்னாண்டோ ஓய்வூதியம் பெறும் தகுதியைப் பெறுவார். (உ-எ-6)

# புதிய இன நெல்லினால் வடக்கில் நல்ல விளைச்சல்

யாழ்ப்பாணம், பெப். 25

தென்பகுதியில் இருந்து தருவிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ஏ.ரி. 402, ஏ. ரி. 353, பி. டபிள்யூ 351, பி. ஜி. 350, செ. 4 ஆகிய நெல் இனங்கள் இம்முறை வடபகுதி விவசாயிகளால் வயல்களில் விதைக்கப்பட்டு நல்ல பலனை அளித்துள்ளன.

எதிர்வரும் காலபோகத்துக்கு இந்த விதை நெல்லை கொள்முதல் செய்து விதைக்க விரும்பும் விவசாயிகள் தத்தம் பிரிவு விவசாய போதனாசிரியர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் த. சிவலோகநாதன் கேட்டுள்ளார். (இ-17)

# சீனக்குடா விமான நிலைய ஓடு பாதை விஸ்தரிப்பு

கொழும்பு, பெப். 25

பெரிய விமானங்கள் தரையிறங்குவதற்கு வசதியாக சீனக்குடா விமான நிலையத்தின் ஓடுபாதை அகலமாக்கப்பட்டு வருகிறது.

திருமலை - கிண்ணியா வீதியின் ஒரு பகுதி இதற்காக சுவீகரிக்கப்படவுள்ளது. மலாய் கோவ் வரை ஓடு பாதை விஸ்தரிக்கப்படும் என்றும் —

சீனன்வாடி விமான நிலையத் தளத்தில் இருந்து புதிய வீதி ஒன்று கிண்ணியா வரை அமைக்கப்படும் என்றும் —

இதற்காக மலாய் கோவ் கடற்கரை மண் போட்டு நிரப்பப்படும் என்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஓடுபாதை விஸ்தரிப்புத் திட்டம் ஒருகோடி 80 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விமானப் படையிடம் உள்ள புக்காரா, வை - 12 மற்றும் போர் விமானங்கள் தரையிறங்க வசதியாகவே ஓடுபாதை விஸ்தரிப்பு இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## யாழ் பல்கலைக்கழக அனுமதி:

# பதிவு செய்யாத மாணவரின் இடத்துக்குப் புதியவர்கள்

### அடுத்த மாத முற்பகுதியில் தெரிவு

யாழ். பல்கலைக்கழகத்துக்கு நடப்பு கல்வியாண்டுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் இதுவரை பதிவு செய்யாத மாணவர்களின் இடங்களுக்கு புதிய மாணவர்களை அடுத்த மாத முதல் வாரத்தில் அனுமதிக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. கே. பரமேஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் 50 வீத மானோர் பல்கலைக்கழகத்தில் சேருவதற்காக தமது பெயர்களை இன்னும் பதிவு செய்யவில்லை என்றும் —

இந்தத் தடவை மேற்கொள்ளப்பட்ட அனுமதி முறையால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழகம் இதனால் மேலும் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளதாகவும் —

இதனால் இதுவரை பதியாத மாணவர்களின் இடங்களுக்கு புதிய மாணவர்களை நியமிக்கும் படியும் —

பதிவாளர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவைக் கேட்டிருந்தார்.

எதிர்வரும் 28ஆம் திகதிக்குப் பின் பதிவு செய்யாத மாணவர்களின் விவரங்களை அனுப்பினால், அடுத்த மாத முதல் வாரத்தில் அவர்களின் இடத்துக்குத் தெரிவான புதிய மாணவர்களின் பட்டியலை அனுப்ப முடியும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு [illegible] பதிவாளர் கூறினார். [illegible]

# பொருள்கள் விலை குறைப்பு

கொழும்பு, பெப். 25

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் பல உணவுப் பொருள்களின் விலைகளை உடனடியாகக் குறைத்துள்ளதாக கொழும்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மைசூர் பருப்பின் சில்லறை விலை 46 ரூபாவாகவும் மொத்த விலை 40 ரூபாவாக, வும் குறைக்கப்பட்டுள்ளது. 750 மில்லி லீற்றர் தேங்காய் எண்ணெய்யின் விலை 12 ரூபா 50 சதத்தினால் குறைக்கப்பட்டது. இதன் புதிய விலை இனி 50 ரூபா ஆக இருக்கும்.

மல்லியின் புதிய விலை 40 ரூபாவாகும். கடுகின் விலை 105 ரூபாவில் இருந்து 80 ரூபா ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. (உ-எ)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப்.25

பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய கோட்டங்களுக்கான ஆண்டு 8, 9 தமிழ் மொழிப்பாட சேவைக்காலக் கருத்தரங்கு ஒன்று நாளை சனிக்கிழமை காலை 8. 30 மணி தொடக்கம் மாலை 4. 30 மணிவரை பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாயலத்தில் நடைபெறும், (க-17)

# 'ஒறேற்றர்' காலமானார்

யாழ்ப்பாணம், பெப். 25

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் புகழ்பூத்த முன்னாள் அதிபர்களுள் ஒருவரும் கல்விமானும், ஆங்கிலப் புலமைமிக்க சொற்பொழிவாளருமான "ஒறேற்றர்" சி சுப்பிரமணியம் கடந்த 18 ஆம் திகதி தமது 92 ஆவது வயதில் லண்டனில் காலமானார். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவரான அவர், அக்கல்லூரியிலும் மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றிலும் ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர் –1944 ஆம் ஆண்டில் — ஸ்கந்தாவின் அதிபராகப் பதவியேற்றார். 1962 இல் அவர் ஓய்வுபெறும் போது ஸ்கந்தா இலங்கையில் தரம் உயர்ந்த கல்லூரிகளில் ஒன்றாக திகழும் நிலையை எட்டியது என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த அவர் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கம், தர்ம [illegible] சபை ஆகியவற்றின் முன்னாள் உறுப்பினருமாவார். (உ)

# இன்றைய நிகழ்வுகள்

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் மாதாந்த பூரணைக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும்

'பண்டைத் தமிழர் பண்பாடு' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம். வேதநாதன் உரையாற்றுவார். (க-17)

★ ★ ★

யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் நாவலர் தருமகர்த்தா சபையினரால் பௌர்ணமிதோறும் நடத்தப்பட இருக்கும் சமய விரிவுரை இன்று வெள்ளிக்கிழமை காலை 9 30 மணிக்கு நடைபெறுகின்றது. நல்லை ஆதின முதல்வரின் ஆசியுரையும் கலாநிதி. ப. கோபாலகிருஷ்ணன் அவர்களின் "நாவலர் வழியிற் சைவம்" என்னும் பொருள் பற்றிய விரிவுரையும் இடம் பெறுகின்றன. (க)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப் 24

கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன், திருநெல்வேலி ஸ்ரீ ராமகிருஷ்ணாலயம் மூலமாக யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான மாவட்ட நிலைப்பேச்சுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் வடக்கு வலயத்தைச் சேர்ந்த எட்டுக் கோட்டங்களிலும், யாழ்ப்பாணம் தெற்கு வலயத்தைச் சேர்ந்த ஐந்து கோட்டங்களிலும் முதலாவது இடத்தைப் பெற்ற அனைத்து மாணவ மாணவிகளும் இதிலே கலந்து கொள்கிறார்கள். இவ்வாண்டு மே மாதத்தில் நடைபெறவுள்ள விழாவின்போது சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படவுள்ளன (க-162.17)

★ ★ ★

வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின்ஏற்பாட்டில் ஒவ்வொரு பூரணை விடுமுறை தினமும் நடைபெறும் கருத்தரங்கு தொடரில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மகப்பேற்றுக்கால மலேரியா என்னும் கருத்தரங்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் மத்திய மருந்தகத்தில் நடைபெறும். இதில் வடபிராந்திய மலேரியாத் தடுப்பு இயக்க அத்தியட்சகர் டாக்டர் கே. எஸ். சிவகுரு கருத்துரையாற்றுவார். [உ-162]

★ ★ ★

சுவாமி விவேகானந்த சிக்காகோ நூற்றாண்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பௌர்ணமி தினத்தன்று காலை 10 மணிக்கு பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெறும்.

கரவெட்டி ஞானாசிரியர் கல்லூரி அதிபர் வே சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும் விழாவில் விசேட பூஜைகள், பேச்சுக்கள், பரிசளிப்பு வைபவம் என்பன இடம்பெறும். [க-17]

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் பூரணை தோறும் நடைபெறும் தீப இசையரங்கில் இன்று மாலை 6 மணிக்கு செல்வி குமுதா சோமசுந்தரக் குருக்களின் வீணை நிகழ்ச்சி இடம் பெறும்.

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் 'ஆறுமுகமான பொருள் எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் திரு. த. கலாமணி சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்துவார். சங்கீதபூஷணம் திரு. செ. குமாரசாமி அறிமுக வுரை நிகழ்த்துவார். (க)

★ ★ ★

வலிவடக்கு பிரதேச இளைஞர் வள நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா இன்று வெள்ளிக்கிழமை பகல் ஒரு மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (க)

★ ★ ★

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சிவன் கோயிலுக்கு அருகில் உள்ள மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் திரு க. முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெறும் போட்டியில் வைத்திய கலாநிதி திரு வை. தியாகராசா பிரதம விருந்தினராகவும் கோப்பாய் த. கி. பு. அரசியல்துறை வட்டலைப் பொறுப்பாளர் திரு. சோழன், வலி. வடக்கு வடபகுதி ப. நோ. கூ. ச. பொது முகாமையாளர் திரு மு. ஆனந்த கிருஷ்ணர் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்துகொள்வார்கள்.

★ ★ ★

நவாலி தெற்கு. அந்திரான் முருகானந்தா சனசமூக நிலையத்தில் இன்று பௌர்ணமிக் கலைவிழா நடைபெறும்.

உரையங்கில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் உரையாற்றுவார்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (க-51)

★ ★ ★

அறவழிப் போராட்டக் குழுவின் தொழில் பயிலகத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நுணாவிலில் நடைபெறும். (க-117)

★ ★ ★

யாழ். மிட்ரவுண் றோட்டரக்ட்கழக கோலப் போட்டி, கண்காட்சி கைப்பணிப் பொருள்களின் விற்பனைக் கண்காட்சி ஆகியன இன்று காலை 11-15 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகும்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகவும் யாழ் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ். ஜெயராஜ், கலை பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு சேரலாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள். (க)

★ ★ ★

வலி. தெற்கு பிரதேசசபையும் அதன் சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் முழுநிலா அறிவியல் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சுன்னாகம் பெரிய மதவடி பொதுநூலக மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. மா. சின்னத்தம்பி "அபிவிருத்திக்கு தொடர்புசாதனமாக கல்வியின் முக்கியத்தும்" எனும் பொருள்பற்றி கருத்துரை வழங்குவார். (க)

★ ★ ★

யாழ், இந்து பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலா நாட் கருத்தரங்கு இன்று மாலை 3 மணிக்கு கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எஸ் ரி. பி. இராஜேஸ்வரன் "புவிநடுக்க அனர்த்தங்கள்" எனும் பொருளிலும் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் "குறள்வழிச் சிந்தனைகள்" எனும் பொருளிலும் கருத்துரை வழங்குவார்கள். [க]

★ ★ ★

தென்மராட்சி கல்விக்கோட்டத்தில் நடைபெறும் பிரவேச பண்டிதர் வகுப்பு மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் தென்மராட்சி கல்விக்கோட்ட பிரதிப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம தலைமையில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் அருள்மொழிச் செல்வர் கனகசபாபதி நாகேஸ்வரன் கலந்து கொண்டு உரையாற்றுவார். (க-117)

★ ★ ★

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்க முன்னாள் செயலாளராகவும், சாவகச்சேரி நகரசபைச் செயலாளராகவும் இருந்து இளைப்பாறிய திரு. த. நவரத்தினராசாவின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் ஒரு பாராட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு யாழ். மாநகரசபை நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

"நல்லூர் முருகன் இணை மணிமாலை" நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் பேராசிரி

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்குண்டு

நல்லூர் ராணி வீதியில் 2 பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க. யோகேந்திரன், 53/1, ராணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (29608)

## கோழிக்குஞ்சு விற்பனை

ஒரு கிழமை வளர்ந்த லைலைன் வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (29610)

## மணவறை விற்பனைக்கு

விரும்பிய தரத்தில் மணவறை பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: S. K. பாலசுப்பிரமணியம் ''கௌரீ வாசா'', முரளி வீதி, ஆவரங்கால் மேற்கு, ஆவரங்கால். (29617)

## வாங்கவும் விற்கவும்

அலுமாரிகள், கட்டில்கள், கதிரைகள், மேசைகள், நிலவிரிப்புகள், கடை கண்ணாடி சோக்கேஸ், கண்ணாடி பிறாக்கி விற்பனைக்குண்டு. வீட்டுத் தளபாடங்களும் வாங்கப்படும். குறிஞ்சி பார்மசி அருகில், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. (29591)

## மாணவர்களே!

உங்கள் பாடசாலைத் தேவைகளைப் பூர்த்தி செய்திட இன்றே வாரீர். ஆனந்தஸ் புத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (6989)

## பணிப்பெண் தேவை

பெரிய வீடொன்றில் (சிறிய குடும்பம்) வீட்டு வேலைகள் செய்வதற்கு ஒரு நல்ல பணிப்பெண் தேவை. நல்ல சம்பளமும் அத்துடன் மேலதிக Bonus உம் தரப்படும். எல்லாம் பேசித் தீர்க்க உடன் நேரில் வரவும். S. K. குலசேகரம், ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர், டச்சு றோட், மீசாலை. (விக்னேஸ்வரா பாடசாலைக்கு முன் வீடு) (29624)

## தவறிவிட்டது

22-2-94 அன்று கைதடி ஆஸ்பத்திரி — யாழ்ப்பாணம் — குளப்பிட்டிச் சந்திகளுக்கிடையில் கற்கள் பதித்த வெள்ளி மோதிரம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் குருநாதன், அண்ணா மகால், 11/2, சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் தொடர்பு கொள்ளவும். (6997)

# பென்ஷன் வவுச்சர்கள் அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் பெப்ரவரி மாத ஓய்வூதிய வவுச்சர்கள் யாழ். செயலகத்தில் இருந்து நேற்று முன்தினம் வங்கிகளுக்கும், ஓய்வூதியர்களுக்கும் அனுப்பப்பட்டன.

கடந்த 14 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'ருகுணு' கப்பலில் ஓய்வூதிய வவுச்சர்கள் எடுத்து வரப்பட்டதாயினும்—

கொழும்பில் படையினரின் சோதனையின்போது அவை பணம் பொருள் அபிவிருத்தி சபையின் ஆவணங்களுடன் கலந்து விட்டதாகவும்—

தற்போது அவை கண்டு பிடிக்கப்பட்டு, செயலகத்துக்கு எடுத்து வரப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (உ-3)


கிற்றார், வயலின்

புதிய வகுப்புகள்

By

பா. கண்ணன்

(Dip - in - Music)

ஆரம்பம்: 27 — 02 — 1994 ஞாயிறு 9-30 a.m.

இடம்: யாழோசை ஆனைப்பந்தி. [29527]



## பாணின் விலை மீண்டும் ரூபா 8/-

யாழ். செயலகத்தினால் மேலதிகமாக அறவிடப்பட்ட பணம் இன்றிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளமையால், பாணின் விலை ரூபா 1/- 25-02-1994 முதல் குறைத்து ரூபா 8/-ஆக விற்கப்படுமென்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றோம்.

தலைவர்.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,

183, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். [29621]


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 24 — 04 — 1925

மறைவு: 27 — 01 — 1994

### சங்கரப்பிள்ளை தில்லையம்பலம்

(சின்னவி)

(நெல்லியடி எஸ். வி. முருகேசு ஸ்தாபன முன்னைநாள் முகாமையாளர்)

[விளானை, களபூமி, காரைநகர்]


எங்கள் குடும்ப வானில் எம்மை உருவாக்கி தீபமாய் எரிந்த ஆருயிர் தெய்வமே! பாசம் மிகுந்த எம் தந்தையே! உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டுப் போகாது. அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25 – 02 – 1994) வெள்ளி காலை வில்லூன்றியிலும் நாளை (26 – 02 – 1994) சனி அவரது இல்லத்தில் வீட்டுக் கிருத்தியமும் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வந்து பங்கு பற்றுமாறு வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்திஅடைய எல்லாம் வல்ல காரைநகர் களபூமி, திக்கரை முருகனின் அருளை வேண்டி நிற்கும்:

– குடும்பத்தினர்.

ஆனைக்கோட்டை றோட், கொக்குவில் மேற்கு, கொக்குவில். (6981)

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### கந்தையா மதியாபரணம்

(ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஊழியர்)

மலர்வு: 20–05–1951

உதிர்வு: 25–02–1982

''உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசங் கொண்டவன் இறப்பினும் வாழ்வான்''
பன்னிரண்டாண்டு சென்றாலும் மதியே,
மகனே, அண்ணா!
மங்கா விளக்காய் நெஞ்சில் வாழ்கிறீர்!

அப்பா, அம்மா, சகோதரர், சகோதரி, மைத்துனர்.

ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர். (6982)

# தேர்தல் ஆயத்த வேலைகளை மே இறுதிக்குள் பூர்த்திசெய்க

## ஐ. தே. க. கிளைகளுக்கு பணிப்பு

கொழும்பு, பெப். 25

நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதி தேர்தல்களுக்கான முன்னோடி ஆயத்த வேலைகளை மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து விடுமாறு ஆளும் ஐக்கிய தேசிய கட்சி நாடு முழுவதிலும் உள்ள அதன் கிளைகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

கொழும்பு நாளிதழ் ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள ஐ. தே. க. அமைப்பாளர்கள், கட்சி எம். பிக்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர் ஆகியோருடன் இணைந்து தேர்தலுக்கான முன்னோடிப்பணிகளை செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வருட இறுதிக்குள் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்த அரசாங்கம் ஆலோசித்து வருவதாகவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நெடுந்தீவில் வயிற்றோட்டம்; 30 பேர் வரை மரணம்!

யாழ்ப்பாணம், பெப். 25

வயிற்றோட்ட நோய் காரணமாக நெடுந்தீவுப் பகுதியில் கடந்த மாதத்தில் மட்டும் 25முதல் 30 பேர்வரை மரணமடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைத்தியசாலையில் சாதாரண நோய்களுக்கான மருந்து வகைகளுக்குக்கூட தட்டுப்பாடு நிலவுவதாகவும்—

வயிற்றோட்ட நோயைக் கட்டுப்படுத்த மக்கள் மாதுளம் பழத்தின் தோலையும், முட்டையையுமே பயன்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை—

நெடுந்தீவுக்கான உள்ளூர் பஸ் சேவையும், அரசாங்க படகு சேவைகளும் இடம் பெறுவதில்லை என்றும்—மக்கள் சிறுபடகு ஒன்றிலேயே நயினாதீவுக்கு தமது பிரயாணத்தை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


யாழ்ப்பாணம்

## அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் விசேட பொதுக்கூட்டம்

இடம்: மேற்படி மன்ற மண்டபம் (நல்லூர் பண்டாரக்குளம் பிள்ளையார் கோயில் தெற்கு வீதி)

காலம்: 27 — 02 — 1994 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி

குறிப்பாக சங்கீத பூஷணங்கள் மற்றும் சங்கீத வித்துவான்கள், மேற்படி மன்றத்தில் இசை பயின்ற மாணவர்கள், இசை அபிமானிகள் யாவரும் கூட்டத்திற்கு வருகை தரும்படி தயவுடன் அழைக்கப்படுகின்றனர்.

சங்கீத பூஷணம் ச. பாலசிங்கம், செயலாளர்.

41/6, அரச வீதி, நல்லூர். [29619]


## காணவில்லை

### செல்வி தியாகராசா பவானி

அன்பின் மகளே! தங்கையே! பவானி இயன்ற வரை உன்னை எல்லா இடங்களிலும் தேடிவிட்டோம் உந்தன் பிரிவால் குடும்பமே ஆறாத்துயரில் மூழ்கி உள்ளது. காலாசதியில் எம்மைத் தெருவில் அலைய விடாதிருக்க தயவுசெய்து உடன் வீடு வரவும். தங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும்;

குடும்பத் தலைவர், சி. தியாகராசா

வீ. இல. 77, நாவற்குழி. [29622]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 05 — 06 — 1912

உதிர்வு: 18 — 02 — 1992

### அமரர் சரவணமுத்து இராசலிங்கம்

திதி: 25 - 02 - 1994 (வெள்ளிக்கிழமை)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எங்களை அன்போடும், பண்போடும் வளர்த்த அன்புத் தெய்வமே! நீங்கள் பிரிந்து ஈராண்டு ஆனாலும் உங்கள் நினைவலைகள் எங்கள் நெஞ்சை விட்டு அகலா. உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள், உற்றார், உறவினர்.

மில் லேன், பிரம்படி, கொக்குவில். (6984)

# மண்எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி 94 ஆம் ஆண்டு மாணவருக்கு மாணவர் அவையினால் நேற்று முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை மண்எண்ணெய் விநியோகிக்கப்படுகிறது. (த)

## நிர்ணயிக்கப்பட்ட வயதுக்கு முன்னர்

# ஓய்வுபெற்ற அரச ஊழியர் மீண்டும் சேவைக்கு வரலாம்

நிர்ணயிக்கப்பட்ட வயதுக்கு முன்னர் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களில் விசேட ஆற்றலும் அனுபவமும் உள்ளவர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவைக்கு அமர்த்த அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய அனுபவமுள்ள அரச ஊழியர்கள் இன்மையால், அரச சேவையின் செயற்பாட்டுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மீண்டும் சேவையில் சேர்ந்து கொள்ள விரும்புபவர்கள் மூன்றாண்டு கால ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு அமர்த்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# தொலைக் கல்விக்கு மேலும் 5 ஆயிரம் ஆசிரியர்கள்

தொலைக்கல்விக்கென இவ்வருடம் மேலும் 5 ஆயிரம் ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தேசியக் கல்வி நிலையத்தின் தொலைக்கல்விப்பிரிவு இதுவரை 3 ஆயிரம் விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டுள்ளது.

விண்ணப்ப முடிவு இம்மாதம் 28ஆம் திகதி ஆகும். பயிற்சிகள் ஜூன் மாதம் ஆரம்பமாகும்.

நாட்டிலுள்ள 205 நிலையங்களில் 48 ஆயிரம் பயிற்சி ஆசிரியர்கள் தொலைக்கல்வி துறையில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இதில் 35 ஆயிரம் பேர் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதத்திற்கு முன் தமது பயிற்சியை முடித்துக் கொள்வார்கள். அவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்றும் நாளையும் நடைபெறும். (இ-த)

# மனையியல் ஆசிரிய நியமனம்

மனையியலில் டிப்ளோமா பெற்றுள்ளவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படவிருக்கின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

தமிழ்மொழி மூலமான ஆசிரியர்களுக்கு இலங்கையில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் வெற்றிடங்கள் உண்டு என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு மனையியல் ஆசிரிய நியமனம் வழங்கப்படுவதில் முன்னுரிமை காட்டப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்ப முடிவு திகதி அடுத்த மாதம் 15ஆம் திகதி ஆகும். விண்ணப்பங்கள் செயலாளர், கல்விச் சேவைகள் சபை, இசுருபாய, பலவத்தை பத்ரமுல்ல என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

இது தொடர்பான விவரங்கள் இம்மாதம் 18 ஆம் திகதி வெளியான அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (ஒ-எ)

# சுகாதார பரிசோதகருக்கு பற்றாக்குறை நிலவுகிறது

## 61 பேருக்கு பதில் 19 பேரே கடமை

யாழ்ப்பாணம், பெப். 25

வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதியில் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு நீண்ட நாட்களாக பற்றாக்குறை நிலவுகிறது. இதனால் ஒரு பொது சுகாதார பரிசோதகர் கூடுதலான இடங்களை கவனிக்க வேண்டியுள்ளது.

தற்போது யாழ். மாவட்டத்தில் 19 பொது சுகாதார பரிசோதகர்களே சேவையில் உள்ளனர். இவர்களிலும் 6 பேர் ஓய்வுபெற்று பின் தற்போது மீள் நியமனம் பெற்று சேவையாற்றி வருகின்றனர். இங்கு மொத்தம் 61 பொது சுகாதார பரிசோதகர் தேவைப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பொது சுகாதார பரிசோதகர் பயிற்சிக்கு என தெரிவு செய்யப்படுபவர்களுக்கு களுத்துறை பயிற்சி நிலையத்தில் தனிச் சிங்களத்தில் விரிவுரைகள் நடத்தப்படுவதால் இப் பயிற்சிக்கு என யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்படுபவர்கள் அங்கு செல்வதை தவிர்த்துக் கொள்கின்றனர் என்று கூறப்படுகிறது.

இது சம்பந்தமான பயிற்சியை யாழ்ப்பாணத்திலேயே நடத்துவதற்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சம்பந்தப்பட்ட அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-162)

# கல்வியின் பின்னடைவை எதிர்த்து போராட வேண்டும்

## துணைவேந்தர் துரைராசா உரை

''1956ம் ஆண்டு முதல் தமிழ் மாணவர்களின் கல்வி திட்டமிட்டு பின்னடைவு செய்யப்பட்டு வந்துள்ளது தமிழ் மக்கள் கண்ணீர் வடிக்கும் நிலைக்கு எமது கல்வி நிலை இன்று வந்துள்ளது. கல்வியின் பின்னடைவை எதிர்த்து நாம் உறுதியுடன் போராடவேண்டும். கல்வியை பின்னடைய செய்தால் நாம் கஷ்டப்பட்டு போராடும் போரினால் கிடைக்கும் நன்மைகள் வீணாகிவிடும்''

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பேருரையாற்றிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா இவ்வாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திருமதி வி. பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் துணைவேந்தர் மேலும் கூறியதாவது—

எமது தமிழினம் ஒரு தேசிய இனம் என கூறும் அளவுக்கு அந்தஸ்து பெற்றிருந்தும் இங்கு ஆளப்படும் ஒரு இனமாகவே இருந்து வந்துள்ளது. அரசியல் விடிவுக்காக போராடும் நாம் எமது பொருளாதார வளர்ச்சியிலும் கவனம் செலுத்த வேண்டும்.

எமது பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்களை கொண்டும், கல்வி அறிவைக் கொண்டும் ஸ்திரமான பொருளாதார நிலை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்றார் அவர்.

கல்லூரி அதிபர் திருமதி வி. பசுபதிப்பிள்ளை கல்லூரி அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றுகையில் கூறியதாவது.

எமது மாணவிகள் கல்வியில் மட்டும் அல்லாமல் விளையாட்டு கலைத்துறை போன்ற புற நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி முன்னேற்றம் அடைந்துள்ளார்கள்.

சண்டிலிப்பாய் பிரதேச உதவி கல்விப் பணிப்பாளர் திருமதி ஆர். இருதயநாதனும் உரையாற்றினார்.

திருமதி ஆர். துரைராஜா பரிசுகளை வழங்கினார். மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## விலகும் வரை விடிவில்லை

வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு முடிவு காணப்பட வேண்டும். ஆனால் அதற்கு அமைதிப் பேச்சுவார்த்தையும், மாநாடுகளும் உதவா. இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு உள்ள ஒரேயொரு வழி பயங்கரவாதத்தை எல்லா வழிகளாலும் ஒடுக்குவதுதான்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஸ்ரீலங்காவின் மூன்று பிரதான பௌத்த பீடங்களில் ஒன்றான அஸ்கிரிய பீடத்தின் அதிபதியான வணபலிப்பான சந்தானந்த மகாநாயக்க தேரர்.

வடக்கு-கிழக்கு விவகாரத்தில் இவரது நிலைப்பாட்டுக்கும் ஏனைய இரண்டு பௌத்த மத பீடாதிபதிகளின் நிலைப்பாட்டுக்கும் வித்தியாசம் இருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

இலங்கை என்ற நாட்டின் இன்றைய பரிதாபகரமான நிலைக்கு பௌத்தமத பீடங்களும் பௌத்த குருமாரும் பெரும் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள். நாடும், நாட்டின் அரசியலும் இந்தளவு மோசமான நிலைக்கு வந்தமைக்கு பௌத்த மத குருமார் அரசியல் தலைவர்கள் மீது செலுத்தி வரும் செல்வாக்கே பிரதான காரணம் என்பது பழைய சங்கதி. இந்த நாடு ஒரு பௌத்த-சிங்கள நாடாக மட்டுமே மிளிர வேண்டும் என்ற அவர்களது சித்தாந்தமும், அந்த விஷ விருட்சத்தை அவர்கள் படர வளர்த்தமையுமே இன்றைய அவலங்களுக்கு வித்திட்டன.

எனினும் அவர்கள் தங்கள் சித்தாந்தத்தையும், அதனை மேலும் பரவச் செய்வதற்கான செயற்பாட்டையும் கைவிடப்போவதில்லை. அதற்குத் தயாரில்லை என்பதனையே அஸ்கிரிய மகாநாயக்க தேரரின் நிலைப்பாடு ஊர்ஜிதம் செய்கிறது. இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தவுடன் கருக்கொண்ட சித்தாந்தத்தை மாற்றுவதற்கு அவர்கள் தயாரில்லை என்பதனையும் வணபலிப்பான சந்தானந்த மகாநாயக்கர் நினைவுபடுத்துகிறார்.

பிரதான பௌத்த மத பீடங்களின் அதிபதிகள் ஆள் மாறினாலும் மேற்கூறிய சித்தாந்தம் மாற்றப்படமாட்டாது. அதனை மேல்மேலும் வளர்ப்பதிலேயே அவை நாட்டம் காட்டும் என்பதனையும் அஸ்கிரிய பீடாதிபதி தெளிவுபடுத்தி உள்ளார்.

அரசியல்வாதிகளைப் போலவே அஸ்கிரிய பீடாதிபதியும் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தையே பயங்கரவாதம் என்கிறார். தமிழர்கள் உரிமைப்போராட்டம் நடத்தினால், அதில் வென்றால் பௌத்த-சிங்கள சித்தாந்தம் செல்லுபடியாகாதுபோய்விடும் என்பது அவரது அச்சம். ஆகையால் அவருடைய பார்வையில் தமிழர்களின் உரிமைப்போராட்டம் ஒடுக்கப்பட வேண்டும் என்ற கருத்து நிலை தோன்றுவது வியப்பல்ல!

இந்த நாட்டில் எத்தனை பேரழிவுகள் நடந்தாலும், இரத்த ஆறு ஓடினாலும் பௌத்த பீடங்களும், பௌத்த குருமாரும் தமது சித்தாந்தத்தையும் நிலைப்பாட்டையும் மாற்றப்போவதில்லை. நாட்டின் அரசியல் மீது, அரசியல்வாதிகள் மீது செல்வாக்குச் செலுத்துவதை நிறுத்தப்போவதுமில்லை.

பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்ற "புதிய" கருத்தை — உலகியல் நடப்புகளுக்கு முரணான கருத்தை — கொண்டிருக்கும் பௌத்த குருமார் தமிழர் விவகாரத்தை சமாதானமாகத் தீர்க்க உதவுவார்கள் என்று எதிர்பார்ப்பது விவேகமற்றதாகும். அவர்கள் போர் மூலமே அதனைத் தீர்க்க கருதுகிறார்கள்.

இவர்களின் செல்வாக்குக்கு உட்பட்டு, சிங்கள-பௌத்த பேரினவாதத்திற்குள் மூழ்கித் திளைக்கும் ஜனாதிபதி விஜேதுங்கா இனவாதம் கக்கி வருவதும் போரையே உறுதிப்படுத்துகிறது.

இவர்கள் இந்த நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் வரை, அரசியலில் இருந்து விலகித் தூர நிற்கும் வரை சமாதானத் தீர்வுக்கு வேறு எவரும் வழி செய்ய இயலும் என்று நம்புவது ஏமாற்றத்தையே தரும்.

ராஜீவ் கொலை விசாரணை:

# வை.கோவின் சத்தியக்கடதாசி; கருணாநிதி சமர்ப்பித்தார்!

சென்னை, பெப். 25

ராஜீவ் காந்தி கொலை பற்றி விசாரணை நடத்தி வரும் ஜெயின் ஆணைக்குழுவிடம் வை. கோபாலசாமி சமர்ப்பித்துள்ள சத்தியக் கடதாசியை தி.மு.க தலைவர் மு. கருணாநிதி வெளியிட்டார்.

ஜெயின் ஆணைக்குழுவிடம் கருணாநிதி சமர்ப்பித்துள்ள சத்தியக் கடதாசியில் தெரிவிக்கப்பட்டவற்றை சில தினங்களுக்கு முன்னர் கோபாலசாமி வெளியிட்டு, ஈழத்தமிழர்களை காட்டிக் கொடுப்பதாக கருணாநிதியின் சத்தியக் கடதாசி அமைந்துள்ளது என்று குற்றஞ் சாட்டியிருந்தார்.

அதற்கு பதிலாக-கோபாலசாமியின் சத்தியக் கடதாசியின் பிரதி ஒன்றைச் செய்தியாளர்களிடம் கையளித்த கருணாநிதி — "தமிழீழம் கோரிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்காக கோபாலசாமி இலங்கைக்குச் செல்லவில்லை என்பதை அவரது சத்தியக் கடதாசி நிரூபிக்கின்றது" — என்று கூறினார்.

கோபாலசாமி தனது சத்தியக் கடதாசியில் இலங்கையின் வடபகுதிக்குச் சென்றதாகவே தெரிவித்திருக்கிறார். யாழ்ப்பாணம் என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தவில்லை என்றும் கருணாநிதி தெரிவித்தார்.

கோபாலசாமி தனது சத்தியக் கடதாசியில் மேலும் தெரிவித்துள்ளதாவது: "இந்திய அமைதிப்படை இலங்கை சென்ற பின்னர் அங்குள்ள தமிழர் படும் இன்னல்களைக் கருத்திற்கொண்டே நான் இலங்கை சென்றேன். அமைதிப்படைக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான மோதலை முடிவுக்குக் கொண்டு வர எண்ணினேன். பேச்சுக்கள் மூலம் தீர்வு காண உதவவே நான் விரும்பினேன். எவருக்கும் தெரியாமல், எனது குடும்ப உறுப்பினர்களுக்குக் கூட தெரிவிக்காமல் நான் இலங்கை சென்றேன்.

"விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து இந்திய அரசுடன் பேச்சு நடத்தும்படி தூண்டுதல் செய்ய விரும்பினேன். நான் பிரபாகரனைச் சந்தித்தேன். மோதலை முடிவுக்குக் கொண்டுவர இந்திய அரசுடன் பேச்சு நடத்தும்படி நான் அவருக்கு தெரிவித்தேன்.

இந்திய அமைதிப்படை விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளதாகவும் அமைதிப்படை யுத்த நிறுத்தம் ஒன்றை பிரகடனப்படுத்தும் வரை பேச்சு நடத்தும் சாத்தியமே இல்லை என்றும் பிரபாகரன் தெரிவித்தார். எனது விஜயத்தின் நோக்கம் ஈடேறவில்லை" — என்றும் திரு கோபாலசாமி தமது சத்தியக் கடதாசியில் தெரிவித்திருப்பதாக திரு கருணாநிதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமது இலங்கைப் பயணத்தை தாம் வீடியோ படமாக எடுக்கவில்லை என்று கூறும் கோபாலசாமி, அவரது பயணத்தை வீடியோவில் விடுதலைப் புலிகள் பதிவு செய்ததாகக் கூறுகிறார். அந்த வீடியோ சிவகாசித்தேர்தலில் பல இடங்களில் காண்பிக்கப்பட்டது என்றும் கருணாநிதி தெரிவித்தார்.

கோபாலசாமியின் அறிக்கைகள் அவர் யாழ்ப்பாணம் சென்றது தமிழ் ஈழம் கோரிக்கையை வலியுறுத்த அல்ல என்பதை தெளிவாகக் காட்டுவதாகக் கூறிய கருணாநிதி, தமது இலங்கை விஜயத்தின் உண்மையான நோக்கத்தை உத்தியோக பூர்வமாக வெளியிடும் துணிச்சல் அவருக்கு இல்லை என்றும் தெரிவித்தார். (த-எ)

## கருணாநிதியின் குற்றச்சாட்டு முற்றிலும் ஆதாரமற்றது!

### கோபாலசாமி சொல்கிறார்

சென்னை, பெப். 25

தாம் ஜெயின் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்த அறிக்கையை வைத்து கருணாநிதி தம்மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று கோபாலசாமி தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் தொடர்பான தமது கொள்கை உறுதியானது என்று தெரிவித்த அவர், தமது சத்தியக்கடதாசி அதனை உறுதிப்படுத்துகிறது என்றார்.

ஜெயின் ஆணைக்குழுவுக்குத் தாம் சமர்ப்பித்த பூர்வாங்க சத்தியக் கடதாசி பற்றியே கருணாநிதி கருத்து வெளியிட்டுள்ளார் என்றும் அதன் பின்னர் தாம் விரிவான இரண்டாவது சத்தியக் கடதாசியை ஜெயின் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

புட்டபர்த்தி படுகொலைகள்

# பொலீஸாரின் விசாரணையில் எந்த முன்னேற்றமும் இல்லை

புதுடில்லி, பெப் 25

புட்டபர்த்தியில் கடந்த ஜூன் மாதம் இடம்பெற்ற பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா மீதான கொலை முயற்சி தொடர்பாக ஆந்திர மாநில குற்றப் பிரிவு பொலீஸார் சாயிபாபாவிடம் மூன்று தடவைகள் விசாரணை நடத்தியுள்ளனர்.

புட்டபர்த்தியில் இடம்பெற்ற சம்பவத்துக்கும் ஒரு பெண்ணுக்கும் தொடர்பு இருந்ததாக அண்மையில் இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா கருத்துக் கூறியிருந்தார்.

அதனையடுத்தே பகவான் சாயிபாபாவிடம் பொலீஸார் விசாரணை நடத்தியுள்ளனர்.

ஆந்திர மாநில பொலீஸ் டி.ஐ.ஜி திரு. டி. எஸ். ராவ் இத்தகவலை தெரிவித்தார்.

புட்டபர்த்தி சம்பவத்தில் பெண் தொடர்பு பற்றி இது வரை எந்தவித ஆதாரமும் கிடைக்கவில்லை. தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது — என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் —

விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகள் பலர் பகவான் சத்யசாயி பாபாவுக்கு விசுவாசமான பக்தர்கள் என்பதால் அவர்கள் விசாரணையில் இறுக்கமான நிலையைக் கடைப்பிடிக்கவில்லை என்றும் —

இதனால் விசாரணை முன்னேற்றம் ஏதுமின்றி மந்தகதியில் நடப்பதாகவும் —

இந்திய ஜனாதிபதி, பிரதமர் போன்றோர் கூட பகவானின் பக்தர்கள் என்பதால் விசாரணையை முழு ஈடுபாட்டுடன் நடத்த முற்பட்ட பொலீஸ் அதிகாரிகள் கூட அந்தப் பொறுப்பிலிருந்து அவ்வப்போது விடுவிக்கப்பட்டு வேறு இடங்களுக்கு மாற்றப்படுகிறார்கள் என்றும் —

தமிழகத்திலிருந்து வெளியாகும் பிரபல வாரப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட்டால் பல உண்மைகள் அம்பலத்துக்கு வரும் என்றும் அப்பத்திரிகை தெரிவித்திருக்கிறது. (உ-இ 5)

## இந்தியா பிளவுபடுவதையே அமெரிக்கா விரும்புகிறது!

### அத்வானி குற்றச்சாட்டு

இந்தியா துண்டு துண்டாகப் பிளவுபடுவதையே அமெரிக்கா விரும்புவதாக பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

காஷ்மீர் சுதந்திர நாடாக வேண்டும் என்பதை ஊக்குவித்து வரும் அமெரிக்கா, காஷ்மீர் இந்தியாவில் இருந்து பிரிந்து போவதையே விரும்புகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

காஷ்மீர் பற்றிய அமெரிக்காவின் கொள்கையை வன்மையாகக் கண்டித்து திரு. அத்வானி அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அந்த அறிக்கையிலேயே அவர் இக்குற்றச்சாட்டுகளை சுமத்தியிருக்கின்றார்.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் தொடக்கம் அமெரிக்க வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் வரை காஷ்மீர் பற்றி தெரிவித்து வரும் கருத்துகள் காஷ்மீர் இந்தியாவில் இருந்து பிரிவதையே ஊக்குவிப்பதாக உள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (எ)

ராஜீய உறவில் விரிசல்;

## அமெரிக்க விஜயத்தை ரத்து செய்ய ராவ் முடிவு!

புதுடில்லி, பெப் 25

காஷ்மீர் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் தெரிவித்த கருத்துகளை அடுத்து இவ்வாண்டின் பிற்பகுதியில் அமெரிக்காவுக்கு மேற்கொள்ளவிருந்த தமது பயணத்தை பிரதமர் நரசிம்மராவ் ரத்து செய்ய முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திரு. ராவின் அமெரிக்க விஜயம் குறித்து இருதரப்பு அதிகாரிகளும் தூதரக மட்டத்தில் பேச்சுகள் நடத்தி இணக்கம் கண்டிருந்தனர் என்றும் —

உத்தேச விஜயத்திற்கான திகதிகளை நிர்ணயிப்பது மட்டுமே இனி இடம்பெறவிருந்தது என்றும் —

இந்த நிலையில் காஷ்மீர் குறித்து இந்தியாவுக்குப் பாதகமான கருத்துகளை அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் வெளியிட்டதனால் இரு நாடுகளுக்கும் இடையேயான ராஜீய உறவில் கீறல்கள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்தே ராவின் அமெரிக்க விஜயம் ரத்தாவதாக புதுடில்லியில் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## இசை விழாவில் இன்று

யாழ்ப்பாணம், பெப். 25

இளங்கலைஞர் மன்ற இசை விழாவின் 14 ஆம் நாளான இன்று கே. சுகிர்தா, பரமேஸ்வரி கணேசன் ஆகியோரின் பாட்டும் பி. நாகேந்திரனின் செஞ்சிற்சிலம்பும் விக்னேஸ்வரி சரவணமுத்துவின் பரத நாட்டியமும் நடைபெறும்.

இன்றைய விழாவிற்கு திரு சி. வி. கே. சிவஞானம் தலைமை வகிப்பார். பேராசிரியர் திரு கா. சிவத்தம்பி, செ. சம்பந்தநாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (க-111)

## அவசரகால சட்டம் நீடிப்பு

கொழும்பு, பெப். 25

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்க வகை செய்யும் பிரேரணை 75 பெரும்பான்மை வாக்குகளால் நேற்று மூன்றினம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 112 எம். பிக்களும் எதிராக 37 எம். பிக்களும் வாக்களித்தனர்.

இன்றைய...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யர் கலாநிதி ப. கோபால கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்க திரு. ஆறு. திருமுருகன் வரவேற்புரையை நிகழ்த்துவார். அம்பவாரிதி இ. ஜெயராஜ் வாழ்த்துரை வழங்குவார். (க-89)

★ ★ ★

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான உடற்கல்விப் போட்டிகள் இன்று காலை முதல் மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (க-117)

★ ★ ★

தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவைக் கூட்டம் இன்று காலை 10.30 மணிக்கு பேரவை மண்டபத்தில் நடைபெறும். (க)

★ ★ ★

யாழ் மாவட்ட அரச ஓய்வூதியர் சங்க பிரதேசக் கருத்தரங்கு இன்று காலை 9 30 மணிக்கு யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். [க-89]

★ ★ ★

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில் தர்மபரிபாலனசபையினரால் நடத்தப்பட்ட சைவ சமய அறிவுப்போட்டியில் பரிசுபெறுபவர்களுக்கு இன்று பிற்பகல் 5.30 மணிக்கு சிவநெறிப்புரவலர் திரு. க. கனகராசா பரிசுகளை வழங்குவார். [க]

★ ★ ★

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நாற்பதாண்டு பூர்த்தியை ஒட்டிய மாணவர்களுக்கான போட்டிகளில் பண்ணிசைப்போட்டி, கிறிஸ்தவ சமயப்போட்டி ஆகியவை இன்று மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். [க-89]

★ ★ ★

இலங்கை செஞ்சிலுவைச் சங்க நல்லூர்ப் பிரிவு இரண்டாம் தொகுதி முதலுதவி பயிற்சியாளருக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 30 மணிக்கு யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறும். (க)

★ ★ ★

கவிஞர் திரு. புதுவை இரத்தினதுரையின் "நினைவழியா நாட்கள்" கவிதை நூல் தொகுப்பின் அறிமுக விழா இன்று பிற்பகல் 3 30 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் திரு. மா. அருட்சந்திரன் தலைமையில் நடைபெறும். (க-90)

★ ★ ★

யாழ்ப்பாணம்— கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்தமடப் பரிபாலன சபையின் மாதாந்த சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். மாவட்ட நீதிபதி திரு ந. யோகசிகாமணி "காஞ்சிப் பெரியாரின் நூற்றாண்டு கால அருளாட்சி" எனும் பொருளில் உரை நிகழ்த்துவார். (க)

★ ★ ★

புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் பௌர்ணமிக் கலைவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு நிலையத் தலைவர் திரு அ. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும். [க-30]

## ஆலயங்களில்

கொழும்புத்துறை மணலியம்பதி அர்மன் ஐயனார் கோயிலில் மாதாந்த திருவிளக்குப் பூசையும் சுமங்கலி பூசையும் இன்று மாலை 6 மணிக்கு நடைபெறும். (க 30)

★ ★ ★

ஆனைக்கோட்டை கூளாவடி கிழக்கு மாரியம்மன் கோவிலில் இன்று வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையும் அதனைத் தொடர்ந்து குளிர்த்தி விழாவும் இடம்பெறும். (க)

★ ★ ★

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மாசிமக இலட்சார்ச்சனை பூர்த்தி இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறும்.

காலை 10 மணி தொடக்கம் ஈழத்தின் பிரபல நாதஸ்வர தவில் மேதைகளின் ... (க)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ் பாடசாலை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் ஆட்டத் தொடரில் இவ்வார இறுதியில் நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ சுன்னாகம் ஸ்கந்தா எதிர் அனகரத்தினம் ம. ம. வி. — இன்று காலை 8-30 மணி முதல் ஸ்கந்தா மைதானத்தில்.

★ யாழ் இந்து எதிர் சென் ஜோன்ஸ் — இன்று பிற்பகல் 2-15 மணி முதலும் நாளை காலை 8-30 மணி தொடக்கமும் சென்.ஜோன்ஸ் மைதானத்தில்.

★ சுன்னாகம் ஸ்கந்தா எதிர் யாழ்.மத்திய கல்லூரி— நாளை மறுதினம் காலை 8-30 மணி முதல் ஸ்கந்தா மைதானத்தில்.

★ சென். பற்றிக்ஸ் எதிர் அனகரத்தினம் ம. ம. வி. — நாளை காலை 8 30 மணி முதல் சென். பற்றிக்ஸ் மைதானத்தில்.

★ ★ ★

கழக அணிகளுக்கு இடையிலான சினேகபூர்வ கிரிக்கெட் ஆட்டத் தொடரில் இன்று ஷப்றா வி க. அணியை எதிர்த்து யாழ் பல்கலைக்கழக அணி மோதும். யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் ஐம்பது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட ஆட்டமாக இது நடைபெறும். (உ)

## ஞாயிறு நிகழ்ச்சிகள்

நந்தினி சேவியரின் "அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்" சிறுகதைத் தொகுதி, சிதம்பர திருச்செந்திநாதனின் 'வெட்டு முகம்' சிறுகதைத்தொகுதி, 'குன்றத்துக் குமுறல்' எனும் மலையகக் கவிதைத் தொகுதி ஆகிய நூல்களின் மதிப்பீட்டு அரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 30 மணிக்கு எழுத்தாளர் ஒன்றியத்தில் நடைபெறும்.

கலாநிதி சோ. கிருஷ்ணராஜா, திரு அ சிவரத்தினம், கவிஞர் இ. முருகையன் ஆகியோர் மதிப்பீட்டுரைகளை நிகழ்த்துவார்கள். (க)

★ ★ ★

தொலைக்கல்வி பயிற்சி நெறியின் 2ஆம் வருட விசேட பயிற்சி வகுப்புக்கள் சுன்னாகம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 30 மணி தொடக்கம் மாலை 4 30 மணிவரை நடைபெறும். (க-85)

★ ★ ★

பாலர் கல்விக் கழகத்தின் 28 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீராவியடி கல்லூரி வீதி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். (க)

★ ★ ★

தெல்லிப்பளை சுப்பர் விளையாட்டுக் கழக புனரமைப்புப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நவாலி புலவர் வீடமைப்புத் திட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க-117)

★ ★ ★

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக மகளிர் பிரிவின் ஆதரவுடன் தமிழீழ கலைஞர்கள் ஒன்றிணைந்து நடத்தும் மாபெரும் கலைவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரவு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (க-117)

★ ★ ★

யாழ். உதைபந்தாட்டச் சங்க வலிகாமம் கிழக்கு உதைபந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 30 மணிக்கு சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும். (க)

★ ★ ★

"பஞ்சாங்கக் கணிப்பு முறைமை" என்ற தலைப்பிலான ஆய்வரங்கு ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறும். (க-17)

★ ★ ★

அகில இலங்கை சர்வமத ஸ்தாபனத்தாரின் மாதாந்த யோகாசனக் கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். (க)

★ ★ ★

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயப் புதிய அதிபர் திரு சி ஆ. சோதிலிங்கத்துக்கு வரவேற்பு உபசாரமும் மாற்றலாகிச் செல்லும் அதிபர் திரு. வி. மாணிக்கத்துக்கு பிரிவுபசாரமும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் உப அதிபர் திருமதி த. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறும். (க)

## டி. ஐ. ஜிக்கள் எண்ணிக்கை: மேலும் அதிகரிக்க முயற்சி?

மேலும் பன்னிரண்டு பிரதி பொலீஸ் மா அதிபர்களை (டி. ஐ. ஜிக்களை) நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் இந்த நியமனங்களை வழங்கத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிகிறது.

இந்த நடவடிக்கையின் பின்னால் பெரும் மர்மம் இருப்பதாக "சண்டே ஐலண்ட்" தெரிவித்துள்ளது.

65 ஆயிரம் பொலீஸார் உள்ள பொலீஸ் படையில் இப்போது ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஐந்து பிரதிப் பொலீஸ் மா அதிபர்கள் உட்பட 40 பிரதிப் பொலீஸ் மா அதிபர்கள் உள்ளனர்.

பொலீஸ் படையில் அதிக அளவிலான உயர்நிலை அதிகாரிகள் உள்ளனர் என்பதை ஒப்புக் கொண்ட சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர், பொலீஸ் சேவையின் தரம் குறைந்து விட்டது என்றும் கூறினார்.

பொலீஸ் சேவையின் வரலாற்றில் 1980 முற்பகுதி வரை ஒரு சமயத்தில் 12க்கு அதிகமான பிரதிப் பொலீஸ் மா அதிபர்கள் இருந்ததில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜூலை மாதத்தில் தான் பொதுச் சேவை ஆணைக்குழு புதிதாக மேலும் 12 பிரதிப் பொலீஸ் மா அதிபர்களை நியமனம் செய்திருந்தது.

இப்போது கூடுதல் பிரதி பொலீஸ் மா அதிபர்களை நியமனம் செய்வதற்கு அரசியல் அங்கீகாரம் பெறும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (உ-எ)

## கோப்பாய் வெளியில் உவர்நில நெற் செய்கை

யாழ்ப்பாணம், பெப். 25

கோப்பாய் வெளியில் பரீட்சார்த்தமாக இரண்டு ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட உவர் நில நெற் செய்கை வெற்றி அளித்துள்ளதை அடுத்து 4 ஆயிரம் ஏக்கர் நிலம் இப்பகுதியில் நெற் செய்கைக்கு ஏற்றதென தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்டுள்ள இந்த நிலங்களை எதிர்வரும் பெரும்போகத்திற்கு தயார் செய்வதற்காக இந்த நிலங்களின் உரிமையாளர்களுக்கு பல சலுகைகளை அளிக்க கோப்பாய் பிரதேச செயலர் முன்வந்துள்ளார்.

சமீபத்தில் உரும்பிராய் சமநல சேவைகள் நிலையத்தில் உவர்நில நெற் செய்கையை ஊக்குவிப்பது தொடர்பாக கோப்பாய் பிரதேச செயலர் திரு. க. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இது பற்றி தெரிவிக்கப்பட்டது.

இதன்படி மேற்படி வயல் நிலங்களை உழுவதற்குத் தேவையான மண்ணெண்ணெய்யை வழங்குவதெனவும்—

வசதிபடைத்தோருக்கு கோப்பாய் பிரதேச செயலர் ஊடாக வங்கிக் கடன் பெற்றுக் கொடுப்பதெனவும்—

பயிர் காப்புறுதி செய்ய நடவடிக்கை எடுப்பதெனவும்—

தீர்மானிக்கப்பட்டது. (இ-162)

**வீணாகும் தண்ணீர் - நம் வல்லாளிபுர கண்ணீர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசுக்கு நன்றி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரும் இவ்வாறு தெரிவித்தனர்.

விடுதலையான பொலீஸாரில் ஒருவரான திலகரட்ண பண்டார கருத்து தெரிவிக்கையில்—

விடுதலைப் புலிகளிடம் இருந்த கடந்த 45 மாதங்களில் அவர்கள் எல்லா வழிகளிலும் எம்மை நன்கு உபசரித்தனர். எமது பெற்றோர்கள் இங்கு வந்து எம்மைப் பார்வையிட வழி செய்தனர்.

—நாங்கள் சமாதானத்தையே விரும்புகிறோம். இங்குள்ள எனது சக சிங்களச் சகோதரர்களும் விரைவில் விடுதலை பெறுவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

இங்குள்ள உண்மையான நிலையை தென்பகுதியில் உள்ள அரசியல் செல்வாக்குமிக்க பௌத்த குருமாருக்கு எடுத்துக் கூறி சமாதான வழிவகைகளைச் செய்ய முயற்சிப்போம் —என்றார். (ஒ-5)

## நாடாளுமன்ற ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னும் அரசாங்கம் அதனையும் பொருட்படுத்தாது பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்து நாடாளுமன்ற அமர்வுகளை ஒத்தி வைத்திருக்கிறது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ள அரசு அஞ்சுவதாகவும், நாடாளுமன்ற அமர்வுகளை ஒத்திவைக்க முனைவதாகவும் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறியது சரியாகிவிட்டது என சுட்டிக்காட்டப்பட்டது. (அ-எ)

## சமாதான முயற்சி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோளை ஏற்று மனிதாபிமான அடிப்படையிலும், நல்லெண்ண நோக்கிலும் சிங்களப் பொலீஸார் இருவரை விடுவிக்க தலைவர் முடிவு செய்தார் என்றும் கலாநிதி பாலசிங்கம் தெரிவித்தார்.

அதி. வண. நீக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை தமிழீழ தேசியத் தலைவருக்கு அனுப்பிய கடிதத்தை நேற்று முன்தினம் இங்கு வந்து சேர்ந்த கத்தோலிக்க துறவிகள் சபைத் தலைவர் வண. பிதா அலெக்ஸாண்டர் - விடுதலைப்புலிகளிடம் கையளித்திருந்தார். (இ-5)


**இன்றும், நாளையும்**

கிறிஸ்துவுக்காக இளைஞரின்

**“அன்பின் தொனி”**

நற்செய்திக் கூட்டங்கள்

இடம்: அலிஸ்டன் சனசமூக நிலைய மைதானம் நாகம்மாள் வீதி, உடுவில்.

நேரம்: இருதினங்களிலும் மாலை 5-30 மணிக்கு நடைபெறும்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

- கிறிஸ்துவுக்காக இளைஞர் -

[சி-7412]



**‘சுப்பஸோ’ வீடியோவின்**

இன்றைய மகத்தான

**புதிய வெளியீடுகள்**

R.K. செல்வமணியின்

- அதிரடிப்படை (ரகு (மான்). ரோஜா. சுமன்)
- சுப்ரமணியசுவாமிகள் (R. பாண்டியராஜன் ஊர்வசி)

அத்துடன் இன்றைய நவயுகத்தில் வெளியாகியுள்ள ஒலிக்கதிரியக்க (Compact Disc- Pyramild DigitaAudio) ஆறு தட்டுக்களை ஒரே நேரத்தில் பன்னிரண்டு படப் பாடல்களை கதிரியக்க தட்டுகளிலிருந்து மனோரம்மியமான முறையில் யாழ். நகர் இசைப்பிரியர்களுக்கு புத்தம் புதிய பாடல்களை உடனுக்குடன் வெளிக்கொணர்பவர்கள்

**‘சுப்பஸோ’ வீடியோ - ஓடியோ சென்ரர்**

198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/7276)


## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் அருந்தவம்

பருத்தியடைப்பு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், 24, குகன் வீதி அரியாலையில் வசித்தவருமாகிய நாகலிங்கம் அருந்தவம் 24 / 2 / 94 அன்று காலமாகிவிட்டார். அன்னார் நாகலிங்கத்தின் (செல்லையா) அன்பு மனைவியும் ஆவார்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு லிங்கேஸ்வரன் (பேரன்)

(29630)

### திருமதி சிவரத்தினம் யோகரத்தினம்

(கங்கா)

கொடிகாமத்தைச் சேர்ந்த திருமதி சிவரத்தினம் யோகரத்தினம் காலமானார்

அன்னார் புலோலியைச் சேர்ந்த யோகரத்தினத்தின் அன்பு மனைவியும், ராமேஸ்வரனின் (பி.ஜி. சர்மா அன் கம்பனி கொழும்பு) அன்புத் தாயாருமாவார் அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக இன்று (25-02-94) காலை 10 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
அ செல்வராஜன் (மருமகன்)

126, 3 ஆம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்.

(29631)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 203/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25-02 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# தரைமார்க்கமாக பொருள்களை கொண்டுவர புதிய வசதிகள்

## கூ. மொ. வி. தலைவர் தகவல்

கொழும்பு, பெப். 23

வடபகுதிக்கு தரை மார்க்கமாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு புதிதாக வசதிகள் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதிக்குத் தேவைப்படும் அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்கும் வேலைவருமாறு அமையும் என்று கூறினார்:-

வர்த்தக வாணிப அமைச்சர் ஏ. ஆர். மன்சூரின் பணிப்பின் பேரில் கூட்டுறவு மொத்த ஸ்தாபனம் பாதுகாப்பு அமைச்சு, புனர்வாழ்வு அமைச்சு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் வடபகுதி மக்கள் நன்மையடையும் வகையில் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் வவுனியாவில் மத்திய களஞ்சியசாலையை அமைக்கும்.

வடபகுதிக்குத் தேவையான சகல பொருள்களும் அங்கு களஞ்சியப்படுத்தப்படும் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் சார்பில் கொழும்பிலிருந்து சரக்குரயில் வவுனியாவுக்கு கிரமமாகப் பொருள்களை எடுத்துச் செல்லும்.

தனிப்பட்ட வர்த்தகர்கள் தமக்குத் தேவையான பொருள்களை இந்த களஞ்சியசாலைகளிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும் இந்த பொருள்கள் இராணுவத்தினரால் பரிசோதனை செய்து லொறிகள் சீல் வைக்கப்பட்டு அனுப்பப்படும். அதன் பின்னர் லொறிகள் மேலதிக பரிசோதனைகள் இன்றி வவுனியாவின் பாதுகாப்பு தடைமுகாமைத் தாண்டி செல்ல அனுமதிக்கப்படும்.

இதனால் லொறிகள் வடபகுதிக்கு தாமதமின்றி செல்ல வழி ஏற்படும். மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கும் பொருள்களைக் கொண்டு செல்லும் வர்த்தகர்களுக்கும் இந்த வசதி செய்யப்படும்.

யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் சார்பில் அங்கீகரிக்கப்பட்ட முகவர் ஒருவர் நியமிக்கப்படுவார். அவர் பொருள்களை கொள்வனவு செய்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைப்பார். இந்த நடைமுறையின் கீழ் முதல் தொகுதி பொருள்கள் யாழ்ப்பாணத்துக்கு அடுத்த மாத முதல் வாரத்தில் அனுப்பி வைக்கப்படும் — என்றார். (அ-9)

அவர் புதிய வசதிகள் பின்கள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளதாக கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின் தலைவர் ஜனாப் எவ். ஏ. யாசின் செய்தியாளர் மாநாட்டில் நேற்றுத் தெரிவித்தார்.

## மீண்டும் இலக்கத் தகடு இல்லாத வாகனங்கள்!

### எதிர்க்கட்சி எம். பி முறையீடு

தென்மாகாணத்தில் இலக்கத் தகடுகள் இல்லாத வாகனங்களின் நடமாட்டம் மீண்டும் இடம்பெறுவதாகவும்—

இதனால் பொதுமக்கள்—பீதியுடன் வாழ்வதாகவும்.

பொதுமக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் கண்டி மாவட்ட எம்.பியுமான டி. எம். ஜயரத்தினா பொலீஸ்மா அதிபரிடம் முறையிட்டிருக்கிறார்.

சிலர் இலக்கத் தகடுகள் அற்ற வாகனங்களில் திரிவதை உடனடியாக நிறுத்தும்படி பொலீஸ்மா அதிபரைத் தாம் கேட்டிருப்பதாகவும் திரு. ஜயரத்தினா தெரிவித்தார்.

இதே வேளை—

தென்மாகாண சபைக்கான தேர்தல் வாக்களிப்பு தினத்துக்கு முன்பதாக, கலைக்கப்பட்ட மாகாண சபையின் உறுப்பினர்களிடமிருந்து அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களைத் திரும்பப்பெற உடன் நடவடிக்கை எடுக்கும்படியும் பொலீஸ்மா அதிபரை திரு ஜயரத்தினா கேட்டுள்ளார். (இ-எ)

## எரிகாயத்துக்கு உள்ளான பெண் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 25

நேற்று இருவர் தீக்காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் மரணமானார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த தியாகராசா வசந்தமலர் (வயது 40) என்பவரே மரணமானவர் ஆவார்.

மதிய உணவைத் தயாரிப்பதற்காக அடுப்பை மூட்டுவதற்கு அடுப்புக்குள் மண்ணெண்ணெய்யை ஊற்றிய போது அடுப்பு திடீரென பற்றி எரிந்ததால் இவர் தீக்காயங்களுக்கு உள்ளானார் என்று தெரிவிக்கப்பட்டது.

மற்றைய சம்பவம் நீர்வேலி சரந்தன் பகுதியில் இடம் பெற்றது.

எரிந்து கொண்டிருந்த குப்பிவிளக்குக்கு எண்ணெய் விட்டபோது விளக்கு தட்டுண்டு தீப்பற்றியது.

எண்ணெய் விட்டவரான சுப்பிரமணியம் முருகதாஸ் (வயது 27) என்பவர் தீக்காயங்களுக்குள்ளாகி யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## செப்ரிசீமியா மலேரியாவால் மூவர் மரணம்

செப்ரிசீமியாவால் இருவரும் மலேரியாவால் ஒருவருமாக நேற்றும் நேற்று முன்தினமும் யாழ். போதனா வைத்தியசாலையில் மூவர் மரணமானர்.

செப்ரிசீமியாவால் மல்லாகம் கல்லாரையைச் சேர்ந்த தெய்வேந்திரன் பிரபாகரன் (வயது 13). புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த வரப்பிரகாசம் நிமால் (வயது 4) ஆகிய இருவரும்—

மலேரியாவினால் பண்டதர் குடியிருப்பைச் சேர்ந்த பிள்ளையார் செல்லத்துரை (வயது 46) என்பவரும்— மரணமடைந்தனர். (இ-15)

## சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், பெப் 25

குப்பைக்குத் தீ மூட்டிய போது அதற்குள் கிடந்த பொருள் ஒன்று வெடித்துச் சிதறியதில் சிறுவன் ஒருவர் காயமடைந்தார்.

கோப்பாய் தெற்கில் நேற்று மாலை இச்சம்பவம் இடம் பெற்றது

இச்சம்பவத்தில் விஜயகுமார் கஜேந்திரகுமார் (வயது 7) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# விசேட உரிமையோ, சலுகையோ தமிழர் கேட்கவில்லை

## தொண்டா கூறுகின்றார்

கொழும்பு, பெப். 24

''ஏனைய இனத்தவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகள் அனைத்தும் தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று தான் தமிழ் மக்கள் கேட்கிறார்கள். விசேட உரிமைகளையோ, சலுகைகளையோ அவர்கள் கேட்கவில்லை. எதிர்பார்க்கவும் இல்லை''

இப்படிக் கூறினார் அமைச்சர் திரு எஸ் தொண்டமான்.

கொழும்பில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எமது மக்களிடையே அடிக்கடி காலத்துக்கு காலம் ஏற்பட்டுவரும் ஒற்றுமையின்மையையும், பிரிவுகளையும் மாறி மாறி அரசேச்சி வருவோர் தமக்கு சாதகமாகப் பாவித்து எமது உரிமைகளை மறுத்து வருகின்றனர் என்ற கசப்பான உண்மையையும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

தமிழ் மக்கள் தொடர்ந்து இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருப்பதையும், அவர்களின் மனித உரிமைகள் கூட மறுக்கப்பட்டு வருவதையும் இனியும் எம்மால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது- என்று கூறினார். (இ-3)

## இலங்கை எரிகிறது! ஜப்பானில் அபிப்பிராயம்

### கருத்தை அகற்ற ஹமீத் பிரசாரம்

கொழும்பு, பெப். 25

இலங்கையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே யுத்தம் நடக்கின்றது என்று ஜப்பானில் நிலவும் கருத்தை அகற்றுவதில் அண்மையில் அந்த நாட்டுக்கு விஜயம் செய்த போது வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீது ஈடுபட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை முழுவதும் எரிந்து கொண்டிருக்கிறது என்றும்— வெளிநாட்டு முதலீட்டுக்கு பாதுகாப்பான இடமாக இலங்கை இல்லை என்றும்— ஜப்பானில் அபிப்பிராயம் நிலவுகிறது என்றும்— இதனை அகற்றுவதில் தமது ஜப்பான் பயணத்தை அமைச்சர் சாகுல் ஹமீது பயன்படுத்தினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானிய முதலீட்டுக்கான வாய்ப்பு இலங்கையில் தாரளமாக உள்ளது என்று கூறிய அமைச்சர் அது பற்றிய விவரங்களை டோக்கியோவில் நடந்த தொழில் அதிபர்களின் கருத்தரங்கு ஒன்றில் வெளியிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## திருப்பதி லட்டுமூலம் 13 கோடி ரூபா!

சென்னை. பெப். 25

திருப்பதிக் கோயிலுக்கு கடந்த வருடம் லட்டு விற்பனை மூலம் மட்டும் 13 கோடி ரூபா (இந்திய ரூபா) கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்தர்களின் விருப்பத்துக்குரிய அந்த ஆலய பிரசாதமே லட்டு ஆகும்.

அத்துடன் இந்த ஆலயத்துக்கு கடந்த வருடம் மொத்த வருமானமாக $145\frac{1}{2}$ கோடி ரூபா கிடைத்துள்ளதாகவும்—

உண்டியல் மூலம் 57 கோடி வருமானம் கிடைத்ததாகவும்— ஆலய வருடாந்த அறிக்கையில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (இ-3)

## ராஜீவ் கொலை வழக்கு நடைபெறும் பூந்தமல்லி நீதிமன்றை இடம் மாற்ற கோரிக்கை

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கு விசாரணையை நடத்தும் விசேட நீதிமன்றத்தை வேறு இடத்துக்கு மாற்றும்படி பூந்தமல்லி காங்கிரஸ் எம் எல். ஏ டி.சுதர்ஸன் கேட்டிருக்கிறார்

இக்கொலை வழக்கு விசாரணை தற்போது பூந்தமல்லிச் சிறையில் அமைக்கப்பட்டுள்ள விசேட நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றது

இந்த நீதிமன்றத்தைக் கட்டிச் செல்லும் நெடுஞ்சாலை பாதுகாப்புக் காரணங்களுக்காக மூடப்பட்டிருப்பதால், குறிப்பாக இரவு நேரங்களில் பொதுமக்கள் அசௌகரியங்களுக்காளாக வேண்டியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

நீதிமன்றத்தை இடமாற்றம் செய்ய முடியாதவிடத்து, நீதிமன்றத்தைச் சுற்றி மதில் கட்ட வேண்டும் என்றும் பின்னர் நெடுஞ்சாலையை மக்களின் பாவனைக்குத் திறந்து விடவேண்டும் என்றும் அவர் கோரினார் (இ-எ)

## மட்டக்களப்பில் யூரியா தடை ஓரளவு தளர்வு?

கொழும்பு, பெப் 25

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகள் யூரியா உரம் பாவிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை ஓரளவு தளர்த்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ முகாம்களில் இருந்து ஒன்றரை மைல் தூரத்துக்கு அப்பால் உள்ள வயல் நிலங்களில் யூரியா பாவனையை விவசாயிகள் மேற்கொள்ள பாதுகாப்பு இணைப்பு அதிகாரி பிரிகேடியர் ரொஹான் குணவர்த்தனா அனுமதி வழங்கி இருப்பதாக டெய்லி நியூஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகள் யூரியா பாவிப்பது 1990 இல் இருந்து பூரணமாகத் தடைசெய்யப்பட்டு இருந்தது (இ-எ)

## விமானத்திற்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திறந்தனர் சந்தேக நபர் உள்ளே தள்ளாடியபடியே நிற்பதைக் கண்ட அவர்கள் அவரை மடக்கிப் பிடித்தனர்.

விமானம் கட்டுநாயக்கா வந்தடைந்ததும் சந்தேக நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேக நபர் இரு மாதங்களுக்கு முன் செய்ரேர சென்றிருந்தார் என்றும் அவருக்கு சாதாரண ஒரு சில்லறை வேலையே கிடைத்தது என்றும் இதனால் அவர் விரக்தி அடைந்து [illegible]

சந்தேக நபர் விமானம் ஏறுவதற்கு முன் [illegible] விமான நிலைய [illegible] ''முட்டக்'' குடித்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

## கடந்த ஆண்டு ராணுவத்துக்கு பின்னடைவு ஏற்பட்ட ஆண்டு

### பிரதமர் ரணில் கூறுகிறார்

யாழ்ப்பாணம், பெப். 22

கடந்த ஆண்டு ராணுவத்துக்கு பின்னடைவை ஏற்படுத்திய ஆண்டு என்பதை தாம் ஏற்றுக் கொள்வதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்ற வெளிநாட்டு செய்தியாளர்களின் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது:-

இவ்வாண்டுக் காலப் பகுதியில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் கூடுதலான பிரதேசங்களை பாதுகாப்புப் படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவார்கள்.

இவ்வருடம் நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் சமர்பிக்கப்பட மாட்டாது.

இவ்வாண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதாலேயே வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட மாட்டாது. அதற்குப் பதிலாக தற்காலிக கணக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும் — என்றார். (இ-3)

## தலைவர்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிப்பு வைபவத்தில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மற்றும் யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை தலைவர் வண. பிதா. சந்திரகாந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விடுதலை செய்யப்பட்ட இரு சிங்களப் பொலீஸாரையும் அழைத்துக் கொண்டு வண. பிதா. அலெக்ஸாண்டர் நேற்று மாலை பருத்தித்துறை — பலாலி வழியாக கொழும்பு திரும்ப ஏற்பாடாகியிருந்தது

இந்த இரு பொலீஸாரும் 1990 ஆம் ஆண்டு மாங்குளம் பொலீஸ் நிலையத்தில் வைத்து விடுதலைப் புலிகளினால் சிறைப் பிடிக்கப்பட்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-5)

## ஆளும் ஐ. தே. கட்சியின் தேர்தல் பிரசார கூட்டங்கள் பொலீஸாரே ஏற்பாடு

கொழும்பு, பெப். 25

கிழக்குமாகாணத்தில் ஆளும் கட்சிக்கு சார்பாக தேர்தல் பிரசாரக்கூட்டங்களை பொலீஸாரே ஏற்பாடு செய்வதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

ஆளும் கட்சி அரசியல் வாதிகளின் தொலைபேசி உத்தரவின் கீழ் பொலீஸார் பிரசாரக் கூட்டங்களை ஒழுங்கு செய்வதாகவும்—

தேர்தல் பிரசார வேலைகளுக்கு கிராம சேவையாளர்களையும் பொலீஸாரையும் ஆளும் கட்சி அமைச்சர்களின் மனைவிமார்கூட பயன்படுத்துவதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் தேர்தல் ஆணையாளரின் கவனத்துக் குக் கொண்டு வந்திருக்கிறார்.

## மூன்று பெண்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச சபை தேர்தலில் போட்டியிடும் ஐ. தே. க வேட்பாளர்களான கணபதிப்பிள்ளை இராசம்மா (24 வயது). வானப்போடி தங்கமலர் (29 வயது), மண்முனை தெற்கு இரவிப்பற்றில் போட்டியிடும் வேட்பாளரான மயில்வாகனம் கலாவதி (26 வயது) ஆகிய மூவருமே காணாமற் போய்விட்டதாக பொலீஸில் முறையிடப்பட்டிருந்தது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org